# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**மார்ச் 2004 ஜீவியம் 9 மலர் 11**

இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| எங்கள் குடும்பம் | 2 |
| சாவித்ரி | 24 |
| லைப் டிவைன் | 26 |
| இம்மாதச் செய்தி | 34 |
| பிரம்மம், புருஷா, ஈஸ்வரா — மாயா, பிரகிருதி, சக்தி | 35 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 40 |
| அன்பர் கடிதம் | 43 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 45 |
| இதுவோ உம் ரௌத்திரக் கருணை | 52 |
| லைப் டிவைன் - கருத்து | 62 |


❀❀❀

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருடச் சந்தா ரூ.60/-**

## எங்கள் குடும்பம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

பிரின்சிபால் : என் மகனுக்குப் பெரிய ஆர்டர் வர இருக்கிறது. என்னைப் பிரார்த்திக்கச் சொல்கிறான். இதுவே அவனைக் கட்டிப்போட சரியான சமயம் என நினைத்தேன். எதற்கும் உங்கள் அபிப்பிராயம் கேட்க விரும்புகிறேன்.

தாயார் : அது சரி, தவறன்று. இருந்தாலும் அது சுயநலம். என் பிள்ளை அன்னையை ஏற்பது நான் அவனுக்குச் செய்யும் நல்லது என்றாலும், நான் அவனை என் வழிக்குக் கொணர முயல்வது சுயநலம். செய்யலாம், தவறாகாது.

பிரின்சிபால் : எப்படிச் செய்யலாம்?

தாயார் : நீங்கள் பிரார்த்தனை செய்தால், எப்படி ஆர்டர் வருகிறது என்பதை அவனுக்கு விளங்கும்படிச் சொன்னால், அதே காரியத்தைத் தான் நன்றாகச் செய்ய முடியும் என்று காண்பான். கண்டவன் செய்தால் நல்லது.

பிரின்சிபால் : உதாரணம் மூலம் சொல்லுங்கள்.

தாயார் : ஆர்டர் சம்பந்தமான தபால்களில் அன்னையின் உருவத்தை நீங்கள் கற்பனை செய்வது, அந்த ஆர்டர் வருவதை அவனுக்குக் காட்டும். சுமார் 10 பகுதிகள் ஆர்டரில் இருந்தால், எந்த ஆர்டரில் படம் தெரிந்ததோ அது வரும். அவனுக்குப் புரியும். உங்கள் கற்பனை கற்பனையான ஆர்டரில். அவன் நிஜமான ஆர்டரில் கற்பனை செய்யலாம். அத்துடன் அவனுக்குள்ள தீவிரம் உங்களுக்கிருக்காது.



பிரின்சிபால் : பிடித்துக்கொண்டால் பெரிய விஷயம். நீங்கள் silent willஐப் பயன்படுத்தச் சொல்கிறீர்கள். சரி, செய்கிறேன்.

தாயார் : ஒரு நாள் கம்பெனிக்குப் போய் டேபிள், பைல், ஆகியவற்றைத் துடைத்து அடுக்கி வையுங்கள். பைலில் உள்ள பேப்பரெல்லாம் கோணல்மாணலாக இருக்கும். அவற்றை எடுத்து அழகுற அடுக்கி வையுங்கள். வரும் ஆர்டர்களுக்கும் நீங்கள் அடுக்கிய தபால்கட்டும் உள்ள தொடர்பை அவன் அறிவான். மேற்கொண்டு மனதாலும் எதிர்பார்க்க வேண்டாம்.

பிரின்சிபால் : இப்போ discipline எனக்கு, அவனுக்கில்லை. இது உண்மையிலேயே சிரமம். எல்லாவற்றையும்கூடச் செய்யலாம். பலனை எதிர்பார்க்கக்கூடாது என்பது தலையைப் பிய்த்து எடுப்பது போலாகும்.

தாயார் : நாமும் பையனைப்போல இருப்பதால் அப்படி இருக்கிறது. அன்னையால் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்க முடியாது. இரயில் 4, 5 மைல் வேகத்தில் போகாது. நாம் 5 பேர்கள் போக இரயில் வேண்டுமென்றால் 200 பேர்கள் போகும் இரயில் வரும். முக்கியமாக சந்தோஷப்படுவது சிரமம். பிறர் விஷயத்தில் சந்தோஷம் வரவேண்டும்.

பிரின்சிபால் : சொந்த விஷயமே எனக்கு disciplineஆக இருக்கிறது. சந்தோஷம் வரவில்லையே.

தாயார் : சந்தோஷம் வந்தால் போதாது. பொங்கி எழவேண்டும். மனித சுபாவத்திற்கு சந்தோஷத்தைவிட எரிச்சல் இயல்பு.

பிரின்சிபால் : மற்றவர்கள் கெட்டுப்போனபொழுது கைதட்டிச் சிரிக்க சந்தோஷம் உடனே எழும்.

தாயார் : அப்படிச் சிரித்தால், அந்த நிலை நமக்கு வரும்.

பிரின்சிபால் : பயமாக இருக்கிறது.

பெண் தாயாரிடம் வந்து காலேஜில் நடந்த ஒரு செய்தியைக் கூறி விவரம் கேட்டாள். ஒரு மாணவி பெற்றோருடன் கோபித்துக்கொண்டு ஓடிவிட்டதாகவும், அவள் தற்கொலை செய்துகொண்டதாகவும் பலவிதமான செய்திகள் வருகின்றன. எதை நம்புவது எனத் தெரியவில்லை என்றாள். எதிரில் மேஜை மீதிருந்த பத்திரிகையில், "பணம் கிடைத்துவிட்டது" என்ற தலைப்பு தாயார் கண்ணில் பட்டது. அவர் மனக்கண்முன் ஒரு பெண் ஓடிப்போய் பாதிவழியில் திரும்பி வருவது தெரிந்தது. மகளிடம், "பயப்படும்படி ஒன்றுமிருப்பதாகத் தெரியவில்லை" என்றார்.

பெண் : எப்படிச் சொல்கிறீர்கள்? உங்களுக்கு எதுவுமே தெரியாதே.

தாயார் : நீ சொல்லும் பெண்ணைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நான் வணங்கும் அன்னைக்கு அவளையும் தெரியும். எனக்கு அன்னையைத் தெரியுமன்றோ?

பெண் : அதனால் எப்படிச் சொல்லமுடியும்?

தாயார் : ஓரிரு நாட்கள் பொறுத்துப் பார்த்தால், நான் நினைத்தது சரியா எனத் தெரியும்.

அப்பொழுது சிறியவன் அக்காவை யாரோ தேடிக்கொண்டு வந்திருப்பதாகச் சொன்னான். போய்ப் பார்த்தாள். அது ஓடிவிட்ட பெண். "உங்கள் வீட்டில் தங்கலாமா? என்னைப் பெற்றோரிடமிருந்து காப்பாற்றுவாயா?" என அவள் பரிதாபமாகக் கேட்டாள். அவளைத் தாயாரிடம் அழைத்து வந்தாள். இது தர்மசங்கடமான நிலை. பெற்றோருக்குச் சொல்லாமலிருப்பது தவறு. சொன்னால் பெண் கசங்குகிறாள். தாயாரும், பெண்ணும், வந்த பெண்ணை பூஜை அறைக்கு அழைத்துப்போய் ஆறுதல் சொல்லி, சாப்பிட வைத்து, பூஜை அறையில் உட்கார்ந்து அன்னையைப் பற்றிப் பேசினர். கறுத்திருந்த பெண்ணின் முகம் அரை மணி நேரத்தில் பளிச்சென்றாகிவிட்டது. பயம் குறைந்துவிட்டது. அவளுக்கு அன்னைமீது நம்பிக்கை வந்துவிட்டது. "இப்பொழுது நினைத்தால், நான் செய்தது சிறுபிள்ளைத்தனம் எனத் தெரிகிறது" என்று கூறி வெட்கப்பட்டாள். ஓடிப்போய் ஒரு குபார் கிளப்பிவிட்டோமே, இனி என்றும் தன் வாழ்வில் இது ஒரு கறையாகிவிட்டதே என வருத்தப்பட்டாள். அன்னையை மனதால் ஏற்றால், மாசு மனத்தை விட்டகன்றால், மக்கள் மனத்தையும்விட்டு அகலும் என்று தாயார் சொன்னது அவளால் நம்பமுடியவில்லை.

தாயார் : பொதுமக்கள் அபிப்பிராயம் என்பது கொஞ்ச நாளைக்குத்தானில்லையா?

வந்த பெண் : இதெல்லாம் எவரும் மறக்கும் விஷயமில்லையே. ஐயோ, நான் என்ன செய்வேன்?

தாயார் : பகவான் ஸ்ரீ அரவிந்தர் உலகைவிட்டுப் போக முடிவு செய்ததை அன்னையிடம் கூறினார். **அது மறக்கக்கூடிய விஷயமா?** அதையும் அன்னையை பகவான் மறக்கச் செய்தார்.

மகள் : அதெல்லாம் பகவானுக்கு.

தாயார் : பகவான் சக்தி முழுவதும் நம் வாழ்வில் செயல்படும். (வந்த பெண்ணை நோக்கி) நீ பகவானை மனத்தில் ஏற்றால், உன்னிடம் யாரும் அதைப் பற்றிப் பேசமாட்டார்கள்.

வந்த பெண் : என்னால் நம்பமுடியவில்லை.

தாயார் : அதை இன்றே காணலாம். பகவானை மனம் ஏற்றால், எவருக்கும் உன்னிடம் பேசும்பொழுது அந்தச் செய்தி நினைவு வாராது. ஏற்றது ஆழமாக இருந்தால் அனைவருக்கும் இப்படி ஒரு விஷயம் நடந்ததே மறந்துபோகும்.

வந்த பெண் : இப்படியும் ஒரு தெய்வமுண்டா? நான் வீட்டிற்கு போனில் பேசி மன்னிப்புக் கேட்கிறேன்.

மீண்டும் சிறியவன் வந்து அப்பெண்ணின் தகப்பனார் அவள் இங்கிருப்பதை அறிந்து வந்திருக்கிறார் என்றான். தாயாரிடம் அவர் வந்து, ''பெண் கிடைத்தது சந்தோஷம். நான் அவளைக் கடிந்துகொள்ளமாட்டேன்'' என்றார். வந்தவள் தகப்பனாருடன் வீடு திரும்பினாள்.

கணவர் ஒரு நாள், பார்ட்னர் அன்று வருவார் எனக் கூறினார். பார்ட்னரும், கணவரும் அவருடன் பேசினர்.

கணவர் : ஒரு முக்கியமான விஷயம் பேச பார்ட்னர் வந்திருக்கிறார்.

பார்ட்னர் : நீங்கள் சொல்லவில்லையா?

கணவர் : நீங்களே சொல்லவேண்டும் எனப் பிரியப்பட்டேன்.

பார்ட்னர் : சரி, இப்பொழுது நீங்களே சொல்லுங்கள்.

கணவர் : நாம் இன்னும் கம்பெனி ஆரம்பிக்கவேயில்லை. அதற்குள் பம்பாயிலிருந்து ஒரு பெரிய கம்பெனி நம்மிடமிருந்து நம் சரக்குக்குக் காண்ட்ராக்ட் கேட்கிறான். அதாவது நாம் உற்பத்தி செய்வது



அத்தனையும் அவனே வாங்கிக்கொள்ளப் பிரியப்படுகிறான். பார்ட்னர் இதை உன்னிடம் கூறப் பிரியப்பட்டார்.

பார்ட்னர் : கூறுவதில்லை, உங்கள் அபிப்பிராயம் தேவை. அன்னை ஆசீர்வாதம் தேவை. முக்கியமான விஷயத்தை விட்டுவிட்டீர்களே. நம் பாக்டரியை 12 மடங்கு பெரிதாக்கச் சொல்கிறார்கள்.

மனைவி : நம் நம்பிக்கையை 12 மடங்கு அதிகப்படுத்தவேண்டும். எப்படி மார்க்கட் நம்மை நோக்கி வருகிறதோ, அப்படி நாம் அன்னையை நோக்கிச் செல்லவேண்டும்.

பார்ட்னர் : எனக்கு அன்னையைத் தெரியாது. உங்கள் கணவரைத்தான் தெரியும். நான் இவரை முதலில் சந்தித்ததும் நினைத்தது, இப்பொழுது அப்படியே நடக்கிறது.

கணவர் : எனக்கு எதுவும் தெரியாது. என்னமோ நடக்கிறது.

பார்ட்னர் : அதற்கு விளக்கம் கூறுங்கள்.

மனைவி : நாம் unconscious கண்மூடி வாழ்கிறோம்.

பார்ட்னர், கணவர் : உடனே செய்யவேண்டியது என்ன?

மனைவி : மனம் அகன்று விரிந்து நன்றியால் உடல் புல்லரிக்க வேண்டும்.

பார்ட்னர் : பம்பாய் கம்பெனி பேசியபொழுது புல்லரிக்கவில்லை. நீங்கள் கூறும்பொழுது புல்லரிக்கிறது.

மனைவி : நன்றியுள்ளது எனப் பொருள்.

கணவர் : எனக்கு இப்பொழுதும் புல்லரிக்கவில்லை. என்ன செய்ய?

மனைவி : புல்லரிக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கவேண்டும். இனி பிள்ளைகள் முரட்டுத்தனமாக, கேலியாகப் பேச முடியாது.

கணவர் : நான் கண்டிக்கிறேன்.

மனைவி : கண்டிப்புப் பயன்படாது.

கணவர் : எது பயன்படும்?

மனைவி : அந்தக் குணம் நம்மிடமிருந்தால் விட்டுவிடவேண்டும்.

கணவர் : எனக்குக் கேலி செய்யும் பழக்கம் உண்டு. அதை விட்டுவிடுகிறேன். முரட்டுத்தனம் என்னிடமில்லையே.

பார்ட்னர் : பிடிவாதம், முரட்டுத்தனமாகுமே.

மனைவி : முரட்டுத்தனம் எத்தனையோ வகைகளில் வெளியில் வரும். பிடிவாதம் அதில் ஒன்று.

பார்ட்னர் : எனக்குப் பிடிவாதம் உண்டு. நான் விட முயல்கிறேன்.

வேலைக்காரி பரபரப்புடன் வந்து இவர்கள் தெருவிலிருந்த பால்காரன் மகன் அமெரிக்கா போகப் போவதாகக் கூறினாள். பார்ட்னர் இவர் முகத்தை ஊன்றிக் கவனித்துவிட்டு,

பார்ட்னர் : இதைப்பற்றி நீங்கள் ஏதேனும் நினைக்கிறீர்களா?

மனைவி : நமக்கு பம்பாய் கம்பனி கொடுப்பதும், இதுவும் ஒன்று.

கணவர் : அவர்களுக்கெல்லாம் அன்னை தெரியாதே.

மனைவி : அன்னைச் சூழல் நம்மைக் கடந்து செயல்படும்.



கணவர் : நாம் இப்பொழுது அவர்களிடம் பால் வாங்குவதும் இல்லை.

மனைவி : பொதுவாக அன்னைத் தொடர்பு இல்லாமலிருக்காது. வேலைக்காரியை விசாரித்தால் தெரியும். (வேலைக்காரியை அழைத்து), இப்போ அவர்கள் யாருக்குப் பால் சப்ளை செய்கிறார்கள்?

வேலைக்காரி: நம்ம மையம் நடத்துபவருக்கும், மையத்திற்கு வருபவர்கட்கும் சப்ளை செய்கிறார்.

பார்ட்னர் : ஆச்சரியமாக இருக்கிறது. அது இல்லாமலிருந்தால்...

மனைவி : தொடர்பு இல்லாமலிருக்காது.

வேலைக்காரி: அவர்கள் வீட்டில் அன்னை படமிருக்கிறது.

மனைவி : எந்தத் தொடர்பும் இல்லாமல் வந்தால் அவர் நல்ல குணத்திற்குச் சூழல் தந்ததாக அர்த்தம்.

வேலைக்காரி: எனக்கு ஏதாவது உண்டா?

மனைவி : உனக்கு எது வேண்டுமானாலும் உண்டு. (பார்ட்னரைப் பார்த்து) சூழல் மட்டும் பால்காரனுக்கு இதைக் கொடுத்திருந்தால், அது போன்றது நமக்குண்டு என அர்த்தம்.

வேலைக்காரி: அம்மா, உங்க கையால் எனக்கு ஒரு படம் கொடுங்கள்.

(பெற்றுக்கொண்டு போகிறாள்).

கணவர் : நாம் நம் சூழலில் நடப்பதை மிகவும் கவனமாகக் கவனிக்கவேண்டுமா?

பார்ட்னர் : நாம் கம்பெனி ஆரம்பித்ததிலிருந்து இதுபோன்று சுமார் 8 அல்லது 10 செய்திகளுண்டு. நான் அவற்றைப் பொருட்படுத்துவதில்லை.

மனைவி : அன்னை இடையறாது செயல்பட்டுக்கொண்டே இருப்பார்.

பார்ட்னர் : நல்லவராக இருக்கலாம். அன்னையைப் பின்பற்ற முடியாது. அது எளிதன்று.

கணவர் : வாயை அடக்கலாம். அன்னை மனத்தை அடக்கச் சொல்கிறாரே.

மனைவி : மனத்தில் உள்ள அசுரன் எட்டிப் பார்க்கும்பொழுது நாம் உஷாராக இருக்கவேண்டும். உடனடியாக பக்தி செலுத்த முயலவேண்டும்.

கணவர் : இது என்ன புதியதாக இருக்கிறதே?

மனைவி : அதுவே அடிப்படை.

பார்ட்னர் : அது உண்மை என நான் அறிவேன்.

மனைவி : சமர்ப்பணம் பலிக்காததற்கு அதுவே காரணம்.

கணவர் : யாருக்கோ, என்னமோ வந்தால் அதெல்லாம் அன்னையால் என்றால், உலகமே நம்மால் நடத்தப்படுகிறது என முடியுமே?

பார்ட்னர் : உங்கள் மனைவி கூறும் தொடர்பு இருக்கிறதே.

கணவர் : அத்தொடர்பு இல்லாவிட்டாலும், சூழல் செய்யும் என்றால்....



மனைவி : நம்மைச் சார்ந்தவர்கள் செய்யும் தவறு, அவர்கட்கு வரும் கெடுதல்கள் அனைத்திற்கும் நம்மிடம் தொடர்பான காரணம் இருக்கும் என்பது தத்துவம்.

கணவர் : இதை எப்படி ஒத்துக்கொள்வது?

மனைவி : அவர்கள் சூழலில் நாமிருப்பதால், நம் சூழலில் அவர்களிருப்பதால் ஒன்றின் பிரதிபலிப்பு மற்றதில் இருப்பது இயற்கை.

கணவர் : நாமே அவர்கள் கஷ்டத்திற்குக் காரணம் எனவும் சொல்லுவாய் போலிருக்கிறது.

பார்ட்னர் : இந்த விளக்கம் முழுவதும் நான் கேட்கப் பிரியப்படுகிறேன்.

மனைவி :

**1) நமது சூழல் நமது பிரதிபலிப்பு.**

**2) அது நம் பொறுப்பு.**

**3) பிரதிபலிப்பு மூன்று நிலைகளிலிருக்கும்.**

- ***நம்மால் நடந்தது அக்காரியம்.***
- ***அக்காரியம் நம்மில் பிரதிபலிக்கிறது.***
- ***தொடர்பில்லை என்றாலும் தெரியும்.***

**4) நாம் எந்த அளவில் அதிர்ஷ்டத்திற்கு அல்லது கஷ்டத்திற்குக் காரணம் என்பது நம் மனம் கூறும்.**

**5) நம் உலகில் நடக்கும் எல்லாத் தவறுகளுக்கும் நாமே பொறுப்பு எனக்கொண்டால் அது நம் வாழ்வைச் சோதனை செய்தால் சரி எனத் தெரியவரும்.**

**6) நம்மைச் சார்ந்தவர் செய்வன அனைத்திற்கும் நாமே பொறுப்பு ஏற்பதை conscious responsibility எனக் கூறலாம்.**

பார்ட்னர் : இது யோசிக்கவேண்டிய விஷயம்.

கணவர் : யோசனையே தேவையில்லை. எனக்கு இந்த philosophyயெல்லாம் தேவையில்லை.

மனைவி : பாக்டரி தேவையில்லையா?

கணவர் : அது எங்கே வந்தது?

மனைவி : பாக்டரி நமக்கு எப்படி வந்தது என யோசித்தால் அன்னை தத்துவம் புரியும்.

பார்ட்னர் : பாம்பே விஷயம்தான் என்னை இதைப் பற்றிச் சிந்திக்க வைத்தது.

எல்லோரும் போனபின்,

கணவர் : நீ சொல்வனவெல்லாம் பயமாயிருக்கின்றன.

மனைவி : பயப்பட ஒன்றுமில்லை. பொறுப்பு அதிகமானால் பலன் அதிகமில்லையா?

கணவர் : அது புரிகிறது. அப்படிச் சொன்னால், ஏற்க முடியும்.

வேலைக்காரியின் கணவர் ஒரு தோப்பில் காவல்காரனாக இருக்கிறான். அவன் முதலாளி சிங்கப்பூர் போவதால் அவனிடம் 3 வருஷத்திற்குத் தோப்பைக் குத்தகைக்குத் தருகிறேன் என்றார்.

வேலைக்காரி: அம்மா படம் வந்த நேரம் எனக்கு நல்ல காலம் வந்திருக்கிறது. நானும், என் குடும்பமும் இனி நிமிர்ந்து வருவோம். இது சக்திவாய்ந்த தெய்வம்தான்.

மனைவி : உன் கணவர் நேர்மையானவனா?

வேலைக்காரி: திருடமாட்டார். வேலை செய்வது குறைவு. 3 வருஷக் குத்தகைப் பணத்தை வியாபாரியிடம் முன் பணமாகப் பெற்று முதலாளியிடம் கொடுக்கிறேன் என்றார். அதற்கு முதலாளி சம்மதிக்கவில்லை. அப்படி வாங்கினால் என் வீட்டுக்காரருக்கு நஷ்டம் வரும் என்றார். "வருஷா, வருஷம் குத்தகை கொடுத்தால் போதும். உன்மீது நம்பிக்கையிருக்கிறது" என்று கூறிவிட்டார்.



மனைவி : எப்படி முடிவாயிற்று?

வேலைக்காரி: என் வீட்டுக்காரர் வியாபாரியிடம் மாதா, மாதம் சிங்கப்பூருக்குச் சேரவேண்டிய பணத்தை நேரே அனுப்பச் சொல்லிவிட்டார்.

மனைவி : இது உனக்கு நல்ல நேரமாக இருக்கிறது. இதைக்கொண்டு நீ முன்னுக்கு வரலாமே.

வேலைக்காரி: முதற்காரியமாக என் பையனை நல்ல பள்ளியில் சேர்க்க வேண்டும். என் கணவருக்குக் கெட்ட பழக்கமில்லை. தோப்பு வருமானம் பெரியது. நான் பையனைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிட்டு வீடு கட்டிவிடுகிறேன். அது போதும்.

மனைவி : எனக்கு வேலைக்கு ஓர் ஆள் வேண்டும்.

வேலைக்காரி: இந்த வேலையை விட மனம் வரவில்லை. இதனால்தான் எனக்குத் தோப்பு வந்தது. இனி வேலை அதிகம். என் தங்கையை உங்க வீட்டில் வேலை செய்யச் சொல்கிறேன்.

கணவர் : நீ சொல்வதும் சரிதான் போலிருக்கிறது. எல்லோருக்கும் அதிர்ஷ்டம் வருகிறது.

மனைவி : வருவது எளிது. பெறுவது நம்மைப் பொருத்தது.

கணவர் : பிள்ளைகளைக் கண்டிக்கக் கூடாது என்றால் என்ன செய்வது?

மனைவி : நாம் நம்மைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

கணவர் : எனக்கு ஒத்துவாராத விஷயத்தைச் சொல்கிறாய்.

மனைவி : எது?

கணவர் : மாறுவது.

மனைவி : பாக்டரி வந்தவுடன் மாறுவதுபோல், இதுவும் மாறவேண்டும்.

கணவர் : ஏன், நீ இந்தப் பொறுப்பை எல்லாம் எடுத்துக்கொள்ள முடியாது என்கிறாய்?

மனைவி : அது பெரிய தத்துவம்.

கணவர் : நாங்கள் எல்லாம் வெளியில் போய் வேலை செய்கிறோம். நீ உள்ளே சென்று வேலை செய்யக்கூடாதா?

மனைவி : எனக்குக் குடும்பத்தில் உள்ள ஸ்தானத்திற்குரிய வேலையை நான் உள்ளே, வெளியே செய்ய வேண்டும். செய்கிறேன்.

பார்ட்னர் : இன்னொரு முறை சொல்லுங்கள்.

மனைவி : கணவருடைய வாழ்வில் மனைவியாய், பையனுடைய வாழ்வில் தாயாராக இருக்கிறேன். அதற்குரிய வேலையை உள்ளே செய்யலாம். வக்கீலிடம் கட்டைக் கொடுத்த கட்சிக்காரன், வக்கீல் கேஸை நடத்தும்படி எதிர்பார்க்கலாம். வக்கீல், கட்சிக்காரன் வாங்கவேண்டிய சர்டிபிகேட்டை வாங்கிவரும்படி எதிர்பார்க்கக் கூடாதன்றோ? சாட்சிகளைக் கொண்டு வருவது வக்கீல் வேலையில்லை. செய்யவும் முடியாது. முடியும் நேரத்திலும் அவற்றையெல்லாம் வக்கீல் செய்வது தவறு.



கணவர் : பாக்டரி வந்திருக்கிறது. எனக்காகப் பிரார்த்தனை செய் என்றால், வக்கீல், சாட்சியெல்லாம் ஏன் அழைக்கிறாய்?

பார்ட்னர் : நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது. முழுவதும் புரியும்படிச் சொன்னால், நானே உங்கள் கணவருக்கு எடுத்துச் சொல்வேன்.

மனைவி : கணவர் பாக்டரியில், ஆபீசில் செய்யவேண்டிய வேலைக்கு உள்ளே மனத்தில் ஆதரவு தேவை. அதை அவரே செய்யவேண்டும்.

பார்ட்னர் : அது வேலைக்குரிய பொறுப்பு எனப்படும்.

மனைவி : கணவர் செய்யும் வேலையில் அவர் வெற்றிபெற, அவர் மனம் தரும் ஆதரவுக்கு, நான் மனைவியாக என் மனத்தால் ஆதரவு தரவேண்டும். அது என் பங்கு.

கணவர், பார்ட்னர் : சரியாகப் புரியவில்லை

மனைவி : பையனைக் கல்லூரிக்கு அனுப்பினால் பணம் செலவு செய்வது பெற்றோர் கடமை. படிப்பது அவன் பங்கு. அவனுக்காகப் பெற்றோர் படிக்க முடியாது, படிக்கக் கூடாது.

பார்ட்னர் : அது சரி.

கணவர் : என்னைப் பொறுப்பற்றவன் என்கிறாயா?

பார்ட்னர் : இன்று வந்துள்ள வாய்ப்புக்குரிய பொறுப்பை மனதால் ஏற்பது உங்கள் பொறுப்பு என்கிறார்.

மனைவி : சரி. B.A.யில் படிப்பதுபோல இன்ஜினீயரிங் காலேஜில் படித்தால் போதாதன்றோ?

கணவர் : என்மீது குறை உனக்கு.

மனைவி : நம்முடைய நிலைமைக்கு 70 மடங்கு பெரிய வாய்ப்பு வந்திருக்கிறது. நீங்கள் 50 மடங்கு பெரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டீர்கள். அது போதாது என்கிறேன்.

பார்ட்னர் : நான் இன்று பம்பாயிலிருந்து வந்த என் நண்பரைச் சந்தித்தேன். அவருக்கு நம் கம்பெனி விஷயம் தெரியாது. அவர் நமக்கு உதவிக்கு வந்த கம்பெனி வேறொரு கம்பெனியிடம் பேச்சுவார்த்தை நடத்துவதாகச் சொன்னார்.

கணவர் : அது ஆபத்தாயிற்றே. எனக்குப் பொறுப்பில்லையா? சரி, சரி, எதுவானாலும் நான் பொறுப்பை முழுவதும் எடுத்துக்கொள்ள முடிவு செய்து 3 நாட்கள் பிரார்த்தனையை மேற்கொள்கிறேன்.

பார்ட்னருக்கு போன் வந்தது. பம்பாய் கம்பெனி அவர் வீட்டிற்குப் போன் செய்துவிட்டு, அங்கில்லை என்பதால், இங்கு கூப்பிட்டார்கள். அவர்கள் இப்பொழுது நம்மூரிலிருக்கிறார்கள். எப்பொழுது காண்ட்ராக்ட் கையெழுத்திடலாம் எனக் கேட்டார்கள்.

கணவர் : அப்போ, 3 நாட்கள் பிரார்த்தனை தேவையில்லை.



மனைவி : அதைக் குறைவறச் செய்து முடிக்கவேண்டும். அதில் குறைவு வைக்கக்கூடாது.

பார்ட்னர் : நான் 3 நாட்கள் பிரார்த்தனையில் பாதியில் வேலை முடிந்தால் மீதிப் பிரார்த்தனை செய்யத் தேவையில்லை எனப் படித்திருக்கிறேன்.

கணவர் : என்னைக் கட்டாயப்படுத்த இப்படிப் பேசுகிறாயா?

மனைவி : உங்களை நான் கட்டாயப்படுத்த நினைத்தால், எல்லாம் கெட்டுப்போகும். நமக்கு அருள், பேரருளாக இருப்பதால் முடிவு எடுத்தவுடன் காரியம் முடிகிறது. மனம் சோம்பேறியாக இருந்தால் 3 நாட்கள் பிரார்த்தனை செய்ய வேண்டும். முடிவு பலமானதானால் செய்யவேண்டாம்.

கணவர் : எனக்கு விட்டால் போதும் என்றிருப்பதால் நான் அந்தப் பிரார்த்தனையைச் செய்வது சரிதான்.

பார்ட்னர் : இந்த விஷயங்களில் தெளிவுபெற வேண்டியது ஏராளமாக இருப்பதாகத் தெரிகிறது. எதையும் அப்படியே எடுத்துக்கொள்ள முடியவில்லை.

கணவர் : நீ சொல்லும் சமர்ப்பணத்தைச் செய்து பார்த்தேன். அது ஒன்றும் பிடிபடவில்லை. பேங்கிற்குப் போகும்பொழுது சமர்ப்பணம் செய்து ஏஜெண்டிடம் பேச நினைத்தேன். சமர்ப்பணம் வெளியே வரும்பொழுதுதான் நினைவு வந்தது. நினைவே வரவில்லை.

பார்ட்னர் : அன்று பேங்கில் நானும் சமர்ப்பணம் செய்ய முயன்றேன். உங்களுக்கு நினைவிருக்கும், மானேஜர்,

“பணம் தர முடிவு செய்துவிட்டோம்” என்றார். எவ்வளவு எனச் சொல்லவில்லையே. சரி, கேட்கக்கூடாது என முடிவு செய்தேன். உடனே மெஷினரி விலையில் 80% தருவதாக முடிவு செய்திருந்ததாகவும், இந்த பம்பாய் காண்ட்ராக்ட் வருவதால் 100% தர முடிவு செய்ததாகவும் கூறினார்.

கணவர் : இதுதான் silent will. எனக்குப் புதியது. அனுபவம் இல்லை. தொகை பெரியது. ஒன்றும் புரியவில்லை. சமர்ப்பணம் மறந்துவிட்டது.

பார்ட்னர் : நீங்கள் உங்கள் மனைவியிடம் பொறுப்பு எடுத்துக்கொள் என்கிறீர்களே. இதுதான் அது. உங்களுக்குச் சமர்ப்பணம் வாராதபொழுது பாங்க் 80%ஐ உயர்த்தி 100% கொடுத்தது உங்கள் மனைவியின் சமர்ப்பணத்தால். சமர்ப்பணம் செய்ய முடியாவிட்டாலும், செய்வது என முடிவு செய்துவிட்டதால், உங்கள் முயற்சி முழுமையானதால், மனைவியின் சமர்ப்பணம் செயல்பட்டது.

கணவர் : நானே சமர்ப்பணம் செய்தால்?

பார்ட்னர் : பாம்பே கம்பெனி கொடுக்கும் காண்ட்ராக்ட் போலிருக்கும்.

கணவர் : காரியம் கூடிவருவது ருசியாக இருக்கிறது. மூச்சுவிட முடியவில்லை.

பார்ட்னர் : வேண்டாவெறுப்பாக ஏற்பதை விருப்பாக ஏற்றால் மூச்சுத் திணறாது.

கணவர் : என்னால் படிக்க முடியாது. நான் தமிழ் மீடியத்தில் படித்தவன். எல்லாப் புத்தகங்களும் ஆங்கிலத்தில் இருக்கின்றன.



பார்ட்னர், மனைவி : 50 புத்தகங்கள் தமிழிலிருக்கின்றன.

கணவர் : அதை மறந்துவிட்டேன். படிக்கிறேன். படிக்கணும். நம் போன் சற்று முன்பு வேலை செய்யவில்லை. கம்ப்ளெயிண்ட் கொடுக்கச் சொன்னேன்.

பார்ட்னர் : சமர்ப்பணம் செய்து பார்க்கலாமா?

கணவர் : சமர்ப்பணத்தை பாக்டரியுடன் நிறுத்திக்கொள்வோம். இதெல்லாம் அதிகம்.

வேலைக்காரி: ஐயா பக்கத்து வீட்டிலிருந்து போனுக்காக கம்ப்ளெயிண்ட் தரச் சொன்னார். என் மாமன் ஒருவர், போன் கம்பெனியில் வேலை செய்பவரை, ரோட்டில் பார்த்தேன். அவரை அழைத்து வரவா?

அனைவரும்: ஆச்சரியமாக இருக்கிறதே.

பார்ட்னர் : சமர்ப்பணம் செய்வதற்கு முன்பே வேலை செய்கிறதே. ஓர் உதாரணம்மூலம் விளக்கமாக இன்னொரு முறை சொல்லுங்களேன்.

கணவர் : நீங்கள் என் மனைவியைச் சமர்ப்பணத்தைப் பற்றிக் கேட்டுவிட்டால் இன்று சாப்பாடில்லை. நாளைக்கு வைத்துக்கொள்ளலாம். வாங்க, சாப்பிடப் போகலாம்.

மனைவி : **நமக்கு பம்பாய் கம்பெனி காண்ட்ராக்ட் பெரிய விஷயம். போன் ரிப்பேர் செய்வது சிறிய விஷயம். சமர்ப்பணத்திற்கு இரண்டும் சமம்.**

கணவர் : சிறியது, பெரியது, இல்லையா?

பார்ட்னர் : நான் இப்படிப் படித்திருக்கிறேன். அதாவது எது சமம்?

மனைவி : போன் ரிப்பேர் செய்ய சமர்ப்பணம் செய்து பார்க்கலாமா? என்று நீங்கள் கேட்டபொழுது, உங்கள் மனம் கம்ப்ளெயிண்ட் செய்வதை நம்புவதைவிட, சமர்ப்பணம் செய்வதை நம்புகிறது. அது பலிக்கிறது.

கணவர் : பாம்பே கம்பெனி காண்ட்ராக்ட் விஷயத்தில் மனம் சமர்ப்பணத்தை அதுபோல் நம்பவில்லை. நம்பினால், நடக்கும் என்கிறாயா? அது நடந்தது எப்படி?

மனைவி : 3 நாட்கள் பிரார்த்தனையைத் தலைவிதியே என ஏற்றுக்கொண்டதால் நடந்தது.

பார்ட்னர் : அது உங்கள் மனைவியின் சமர்ப்பணத்திற்கு நீங்கள் தடையாக இருக்கக்கூடாது என்று முடிவு செய்ததால் என நினைக்கிறேன்.

மனைவி : உங்களுக்குச் (பார்ட்னருக்கு) சமர்ப்பணத்தில் நம்பிக்கை இருக்கிறது. தெளிவு வேண்டும் எனக் கேட்கிறீர்கள்.

பார்ட்னர் : தெளிவு இருந்தால் அதிகமாகப் பலிக்குமா?

மனைவி : ஆமாம்.

கணவர் : அடுத்த கட்டமும் உண்டா?

மனைவி : தெளிவும், நம்பிக்கையுமிருந்து சமர்ப்பணம் சந்தோஷம் தருவது. அதற்கடுத்தது, சமர்ப்பணம் பலிக்கவேண்டும் என எதிர்பாராதது.

பார்ட்னர் : பலனை எதிர்பார்க்கவில்லை எனில்....

மனைவி : சமர்ப்பணமே பலன், அதைச் செய்வதே சந்தோஷம் என்ற மனநிலை.



பார்ட்னர் : உதாரணம்.

மனைவி : சினிமா எதற்காகப் பார்க்கிறோம்? பார்ப்பதே சந்தோஷமன்றோ? அதுபோல் சமர்ப்பணம் is an end in itself. சமர்ப்பணம் செய்ய மனம் விழையவேண்டும். அதற்குரிய சந்தர்ப்பங்களை மனம் நாடவேண்டும்.

கணவர் : கேலி செய்வதும் அப்படித்தானே?

மனைவி : ஆம்.

பார்ட்னர் : கேலி பிறரைப் புண்படுத்தும்.

மனைவி : அப்படியும் உண்டு. எவரையும் புண்படுத்தாமல் அனைவரும் சிரிக்கும் கேலியும் உண்டன்றோ?

பார்ட்னர் : விஷயம் சந்தோஷத்திலிருக்கிறதா?

மனைவி : ஆமாம். சந்தோஷத்திற்கடுத்தது ஆனந்தம்.

கணவர் : தத்துவப்படி ஆனந்தமே முடிவு.

மனைவி : ஆனந்தம் (Bliss, Delight) இரண்டு நிலைகளில் உள்ளது. Bliss என்பது ரிஷிகள் பெறும் ஆனந்தம், சச்சிதானந்தத்தின் பகுதி. Delight என்பது இறைவன் பரிணாமத்தில் அனுபவிக்கும் ஆனந்தம். நன்றியறிதலில் உடல் புல்லரிக்கும் ஆனந்தம்.

பார்ட்னர் : அதற்கு உதாரணம் தரமுடியுமா?

மனைவி : நாம் இப்பொழுது சாப்பிடப் போகிறோம். சாப்பாட்டை ருசிப்பது சந்தோஷம். சாப்பாடு பிரம்மம் என அறிவது, தருவது, Bliss, ஆனந்தம். ருசியின் பின்னால் உள்ள (ரஸா) ஆனந்தத்தை ரிஷி அறிவது. அது க்ஷணம்

தெரியும், நிலையாக இருக்காது. இந்தச் சாப்பாட்டை நாம் சாப்பிடுவது இறைவன் செயல் என நம் உடல் அறிந்தால் அந்த Delight ஆனந்தம் நம் உடலில் நிரந்தரமாகும். உடல் புல்லரிக்கும். **அப்பொழுது நாம் சாப்பாட்டை அனுபவிக்கவில்லை. சாப்பாட்டில் வெளிப்படும் இறைவனை, நம்முள் உள்ள இறைவன் அனுபவிக்கிறான்**. அது பூரண யோகத்திற்குரிய Delight ஆனந்தம்.

பார்ட்னர் : அதைத்தான் intolerable ecstasy, unflinching rapture, பொறுக்கமுடியாத பூரண ஆனந்தம், தாங்கமுடியாத பூரிப்பு என்கிறோமா?

மனைவி : ஆம்.

கணவர், பார்ட்னர் : நமக்கெல்லாம் அதில்லையா?

மனைவி : அன்னை நமக்கு அவற்றை அளிப்பதை நாம் பாக்டரி, காண்ட்ராக்ட், போன் ரிப்பேர், தோப்புக் குத்தகை, என்ற பலன்களாகப் பெறுகிறோம். நமக்குச் சாப்பாடு அன்னைக்குச் சமர்ப்பணம்.

பார்ட்னர் : விஷயம் ஒன்றுதான். நாம் அனுபவிக்கும் மனநிலைதான் மாறுபட்டதா?

மனைவி : ஆமாம்.

கணவர் : அன்போடு ஒருவர் தரும் பரிசை நாம் பரிசாகப் பெறுகிறோம். அன்பைக் கவனிப்பதில்லை. பரிசில் அன்பைக் காணவேண்டும்.

மனைவி : முதல் நிலை பரிசு, இரண்டாம் நிலை அன்பு, மூன்றாம் நிலை அன்பைத் தாங்கிவரும் பரிசு.



கணவர் : உனக்குப் பக்குவம் வந்துவிட்டது. எங்களுக்குச் சாப்பாடு போடு. நாங்கள் சாப்பிடுகிறோம், நீ ரஸாவை அனுபவி.

மனைவி : எனக்கு விளக்கம் தெரியும். ரஸா தெரியாது. ரஸாவை அனுபவிப்பது பக்குவம். ரஸாவை நிரந்தரமான பூரிப்பாக அனுபவிப்பது பவித்திரமான பக்குவம். அதைத் தரும் சமர்ப்பணம் சரணாகதியாகிறது. அந்தச் சரணாகதிக்கு consicous responsibilityயும் உண்டு. எவருடைய செயலுக்கும் நாம் ஏற்கும் அன்னை பொறுப்பு அது.

பார்ட்னர் : இன்று சமர்ப்பணத்தைத் தெளிவாகக் கேட்டுக் கொண்டேன். அடுத்த முறை இதை எப்படிச் செய்வது என்று கூறுங்கள்.

மனைவி : சரி. மனம் பிறருக்கு அதிர்ஷ்டம் வரவேண்டும் என்று பிரியப்படுவதுபோல் அனைவருக்கும் தாங்கமுடியாத பூரிப்பு வரவேண்டும் என நினைக்கவேண்டும்.

*தொடரும்....*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

தவிர்க்க முடியாத பிரச்சினைக்கு, அன்னையை அழைக்கவேண்டும் என்ற உபதேசம் எளிமையாகத் தோன்றுவதுபோல் பின்பற்ற சிரமமானதாகும்.

***பின்பற்ற முடியாத எளிமை.***

## p.44 And lost life's incapacity for bliss.

**கடந்த வாழ்வு ஆனந்தத்தை இழந்த வாழ்வு.**

- *சாவித்திரியிலில்லாதது உலகில் இனி வரப்போவதில்லை என அன்னை கூறியிருக்கிறார். அதன் ஓர் அம்சத்தின் இரு பகுதிகள்.*

  - **சாவித்திரியின் அந்தராத்மாவின் பகுதிகள் எழுந்து வெளிவந்து, "நானே உன் ஆன்மா, நான் சொல்வதைக் கேள்" எனக் கூறி அவளைத் தடம் பிறழ முயல்கிறார்கள். சாவித்திரி ஒரு முறை தவறாது, ''நீ ஆன்மாதான். ஆனால் என் ஆன்மாவின் பகுதி'' எனக் கூறி அவற்றிடமிருந்து தப்பிக்கின்றாள்.**

  - **எமன் தானே முழுமுதற் கடவுள் என சாவித்திரியிடம் கூறி இறைவனுக்கு எதிரான மனித வாதங்களை ஒன்றுவிடாமல் கூறுகிறான். வரம் தர விரும்புகிறான். அவை முடிவான பதில்கள். ஆனால் சாவித்திரிக்கு அவை முடிவானவையல்ல. ஸ்ரீ அரவிந்தம் மனிதனுக்கும், மாயாவாதிக்கும், நாத்திகனுக்கும், பௌத்தத்திற்கும், யதார்த்தவாதிக்கும், மனித இலட்சியத்திற்கும், சுயநலத்தின் சிகரமான மோட்ச இலட்சியத்திற்கும் சொல்லும் பதில்களை, சாவித்திரி எமனுக்குக் கூறுகிறாள்.**

    - *அதன் விளைவாக எமன் தோற்கவில்லை.*
    - *இருளின் தலைவன் ஒளியின் பிழம்பாக மாறுகிறான்.*
    - *மாறியபின்னும் அறிவாளிகள் உலகில் முழுமையை அறியாமல் பகுதியை முழுமையெனக் கண்டதால் சொல்லும் வாதங்களைக் கூறுகிறான்.*
    - *எமன் தோல்வியை ஒப்புக்கொள்ளவேயில்லை; கடைசிவரை ஒப்புக்கொள்ளவில்லை என்பது அகந்தையும், மனமும் ஆயிரம் தோல்விகட்குப்பின், தங்கள் தோல்வியை ஏற்று வாயால் கூறுவதில்லை என்ற உண்மையை காவியநயத்துடன், சொல்லாமல் பகவான் சுட்டிக்காட்டி வலியுறுத்துவது, ''இன் சொலாலன்றி இரு நீர் வியனுலகம் வன் சொலால் என்றும் மகிழாதே'' என்று காட்டுகிறது.*

❀ ❀ ❀




**MALARNDHA JIVIYAM**

Form IV (See Rule 8)

Statement about ownership and other particulars about **Malarndha Jiviyam** (according to Form No.IV, Rule 8 circulated by the Registrar of Newspaper for India).

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Pondicherry |
| 2. | Period of its Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | **Mrs. Anuradha Sriram,** Integra, 51, II cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry 605 005. |
| 4. | Publisher's Name | : | **Mr. P.V. Balakrishnan,** 12, I Cross, Venkata Nagar, Pondicherry 605 011. |
| 5. | Editor's Name | : | **Karmayogi** |
| | Nationality | : | Indian |
| | Address | : | Plot 4, Venkata Nagar Extn., Pondicherry 605 011. |
| 6. | Name and address of the individual who owns the newspaper and partners or shareholders holding more than 1% of the capital. | : | **The Mother's Service Society,** Plot 4, Venkata Nagar Extn., Pondicherry 605 011. |

I, (P.V. Balakrishnan) hereby declare the particulars given are true to the best of my knowledge and belief.

Date : 01-03-2004

**(P.V. BALAKRISHNAN)**
Signature of the Publisher.

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XII. Delight of Existence : The Solution

Page No.108
Para No.14

This elimination is possible.
Pain and pleasure are currents of delight.
It is a delight of existence.
Pain is a perverse current.
Pleasure is imperfect.
But still they are currents of delight.
There is a reason for this imperfection and perversion.
It is the self-division of being.
The division is in the consciousness of the being.
It is done by Maya.
Maya measures and limits.
An egoistic reception is the consequence.
It is a piecemeal reception.
It is a reception by the individual.
It should be a universal reception.
There is a sap of things.
It is the essence.
It is called by the Sanskrit term rasa.



## 12. ஆனந்தம் - விளக்கம்

வலியை விலக்கலாம்.
வலியும், சந்தோஷமும் ஆனந்தத்தின் அலைகள்.
அது சச்சிதானந்தம்.
வலி குதர்க்கமான உணர்வு.
சந்தோஷம் குறையான ஆனந்தம்.
இரண்டும் ஆனந்தத்தின் வெளிப்பாடுகள்.
இக்குறைக்கும், குதர்க்கத்திற்கும் காரணமுண்டு.
ஜீவன் கண்டமானதே காரணம்.
ஜீவனின் ஜீவியத்தில் இப்பிரிவினை உள்ளது.
இது மாயையின் செயல்.
மாயை அளந்து வரையறுக்கிறது.
இதன் விளைவாக அகந்தை ஏற்படுகிறது.
இது கண்டமான வாழ்வு.
இது மனித வாழ்வு.
இது பிரபஞ்ச வாழ்வாக வேண்டும்.
பொருள்களுக்கு ரஸமுண்டு.
அது சாரம்.
சமஸ்கிருதம் அதை ரஸம் என்கிறது.

It is the taste of things too.
All things carry this rasa in them.
All contacts reveal the rasa.
The universal soul knows this.
We are incapable of seizing the essence.
We do not seek this essence, Rasa.
Rasa is the essence of the thing in its contact.
We see how our desires are affected.
We know how our fears are touched.
We know our cravings, shrinkings, grief and pain.

We know how they suffer.
Our pleasure is imperfect and transient.
We have a blank inability to seize the essence.
We can be entirely detached in our mind.
In our hearts too we can be detached.
We could be disinterested in the mind.
We can impose that detachment on the nervous being.
It can eliminate the imperfect forms.
Even perversity too can thus be eliminated.
There is the true essential taste of things.
It is the inalienable delight of things.
It is found in all variations.
Then, it will be within our reach.
Art and poetry know of this reception.
It is a universal delight of aesthetic reception.



அது பொருள்களின் ருசி.
எல்லாப் பொருள்களுக்கும் இந்த ரஸம் உண்டு.
எல்லா ஸ்பர்சங்களும் இந்த ரஸத்தை வெளிப்படுத்துகின்றன.
பிரபஞ்ச ஆத்மா இதையறியும்.
நம்மால் சாரத்தைக் கைப்பற்ற முடியவில்லை.
ரஸா என்ற சாரத்தை நாம் தேடுவதில்லை.
ஸ்பர்சத்தின் சாரம் ரஸம்.
நம் ஆசைகள் எப்படி பாதிக்கப்படுகின்றன என நாம் காண்கிறோம்.
நம் பயம் என்னாகிறது என நாம் அறிவோம்.
நம் ஆசை, வேகம், சுருக்கம், வருத்தம், வலி, ஆகியவற்றை நாம் அறிவோம்.
அவை எப்படி வதைகின்றன என நாம் அறிவோம்.
நம் சந்தோஷம் குறையானது, தற்காலிகமானது.
சாரத்தைப் பற்ற நமக்குத் திறமையில்லை.
மனத்தால் நாம் முழுவதும் விலகியிருக்க முடியும்.
உள்ளத்தாலும் நாம் பற்றற்றிருக்க முடியும்.
மனமும் பற்றற்றிருக்கும்.
உணர்வின் பற்றற்ற தன்மையை நாம் அதிகப்படுத்த முடியும்.
அது குறைகளை விலக்கும்.
குதர்க்கமும் அப்படி விலகும்.
உண்மையான சாரமான ருசியுண்டு.
அது நீங்காத ஆனந்தம்.
எல்லா மாற்றங்களிலும் அது உண்டு.
அந்நிலையில் நமக்கு அது எட்டும்.
கலையும், காவியமும் இதையறியும்.
கலைநுகர்வை பிரபஞ்சம் அறிவது இது.

The sorrowful has this Rasa.

We can enjoy it in the terrible.

Even in the horrible and repellent it is there.

Detachment enables us to think of the essence.

Our disinterest makes us forget ourselves.

We forget our self-defence too.

Therefore we can enjoy the rasa.

The pure delight is supramental.

It is supra aesthetic.

Aesthetic reception is not precise.

It is not a precise image of the delight.

Nor is it a reflection of the rasa.

The supramental would eliminate the sorrow.

Sorrow, terror, horror, disgust will thus be eliminated.

Their causes too will be eliminated by the supramental.

Aesthetic reception admits the causes.

Aesthetic reception is partial.

It is imperfect.

It represents one stage of the delight.

It is a progressive stage of universal delight.

It is seen in the manifestation.

One part of our nature admits that detachment.

It is a detachment from the egoistic sensation.

We are divided beings.

We see chaos and discord.

Detachment is a universal attitude.



வருத்தத்திற்கு ரஸம் உண்டு.

பயங்கரத்திலும் இதைக் காணலாம்.

விகாரத்திலும், கொடூரத்திலும் இது உண்டு.

விலகியிருந்தால் சாரத்தைப் பற்றிச் சிந்திக்க முடியும்.

பற்றற்ற நிலை நம்மை மெய் மறக்கச் செய்யும்.

நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதையும் மறப்போம்.

அதனால் ரஸத்தை அனுபவிக்கலாம்.

சுத்த ஆனந்தம் சத்தியஜீவியத்திற்குரியது.

அது கலை நுகர்வைக் கடந்தது.

கலையுணர்வு விவரமானதில்லை.

அது ஆனந்தத்தின் தெளிவான ரூபமில்லை.

அது ரஸத்தையும் பிரதிபலிக்காது.

சத்தியஜீவியம் கவலையைக் கரைக்கும்.

வருத்தம், பயங்கரம், கொடுமை, அருவருப்பு விலகும்.

சத்தியஜீவியம் அதன் வேரையும் அறுக்கும்

கலை ரசனை வேரை அறுக்கவல்லதன்று.

கலையுணர்வு பகுதி.

அது குறையானது.

அது ஆனந்தத்தில் ஒரு நிலை.

பிரபஞ்ச ஆனந்தத்தின் வளரும் கட்டங்களில் அதுவும் ஒன்று.

இதை சிருஷ்டியில் காணலாம்.

நம் சுபாவம் இப்பற்றற்ற நிலையை அடையவல்லது.

இது அகந்தையினின்று விலகுவதாகும்.

நாம் கண்டம்.

குழப்பமும், சச்சரவும் நாம் காண்கிறோம்.

பற்றற்ற நிலை பிரபஞ்சத்திற்குரியது.

Through it Soul sees harmony and beauty.

Full liberation needs liberation of all parts.

It is universal aesthesis.

It is the universal standpoint of knowledge.

It is a universal detachment of things.

Yet it has sympathy with all.

Nervous and emotional being needs sympathy.

*Contd...*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

திருவுருமாற்றம் நடைபெற மனதை மாற்றவேண்டும்; ஆசையை நாடக்கூடாது; ஆசையிலிருந்து செயல்பட மறுக்கவேண்டும்.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பிறர் வாழ்வு மலர, தன்னை விட்டுக்கொடுப்பது அர்ப்பணம். தன் அதிகாரமும், செல்வாக்கும் அதிகப்படுவதை மனிதன் முன்னேற்றம் என இன்று கருதுகிறான்.

இறைவன் மனித வாழ்வில் மலர்ந்து வெளிப்படுதல் அவசியம் என மனிதன் உணரவேண்டுமானால், தன்னுடைய சொந்த அபிப்பிராயங்களை இரசிக்கும் பழக்கத்தைத் தான் விட்டுவிடவேண்டும் என அவன் அறியவேண்டும்.

***பிறர் வாழ்வு மலர, தன்னை விட்டுக்கொடுப்பது அர்ப்பணம்.***



**அதன்மூலம் ஆத்மா சுமுகத்தையும், அழகையும் காண்கிறது.**

**முழு விடுதலைக்கு எல்லாப் பகுதிகளும் விடுதலை பெறவேண்டும்.**

**இது பிரபஞ்ச கலை நுகர்வு.**

**இது பிரபஞ்சத்தின் ஞானம்.**

**இது பிரபஞ்சத்தின் பற்றற்ற நிலை.**

**இருந்தாலும் இதற்கு அனைவரிடமும் அனுதாபம் உண்டு.**

**உணர்வும், இதயமும் அனுதாபத்தை நாடுகின்றன.**

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தெரியவேண்டியது, தெரியாதது அறியாமை. “நாம் யார்” என்று தெரிந்துகொள்ள விருப்பப்படாமல், “தான்” - அது - யார் என்பதை மறக்கும் அளவுக்குப் போவது, பகவான் விளக்கப்படி “அறியாமை” ஆகும்.

***தெரியவேண்டியது தெரியாதது அறியாமை.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

விஸ்வாசம் உயர்ந்த மனித இலட்சியம். கடந்த கால விஷயங்களுக்கு விஸ்வாசமாக இருப்பது, குறிப்பாக அவற்றின் தோற்றத்திற்கு விஸ்வாசமாக இருப்பது எதிர்கால முன்னேற்றத்திற்கு விலங்காகும். முடிவில் அதற்குத் துரோகமாகும்.

## இம்மாதச் செய்தி

**தானே உணர்ந்து மாறும் மாற்றம் திருவுருமாற்றம்.**





## பிரம்மம், புருஷா, ஈஸ்வரா — மாயா, பிரகிருதி, சக்தி

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

*(இராணிப்பேட்டை தியான மையத்தில் 15.8.2003 அன்று திருமதி. வசந்தா லக்ஷ்மி நாராயணன் நிகழ்த்திய உரை)*

பெருநிலம் பெற்றவர் செல்வமே செல்வம். வியாபாரத்தில் சம்பாதித்த பணத்திற்கு அந்தஸ்து இல்லை என்ற காலம் இருந்தாலும் கீழ்மட்டக் குடும்பங்களும், மேல்மட்ட பெருநிலக்கிழார்களும் பணத்தை ஏற்பார்கள் என்பதால் இம்முனைகளை இணைக்கும் பாலம் பிங்கிலி. அவனை விரும்பும் ஜேன், எலிசபெத்தின் லட்சியம். தன் திருமணத்தைவிட ஜேன் பிங்கிலியை மணப்பதை அவள் முக்கியமாகக் கருதுகிறாள். அந்த நல்லெண்ணமே அவளை பெம்பர்லிக்கு போகும்படிச் செய்கிறது. டார்சி, பெம்பர்லியை விட்டு பிங்கிலியுடன் புறப்பட்டவுடன் அவனுடைய எதிரி விக்காம் தன்னை அறியாமல் தன் லட்சியத்தைப் பூர்த்தி செய்ய மெரிடன் வருகிறான். பொய் தன்னை அழிக்கும் பாதை இது. பொய்யிலிருந்து மெய் எழும் வகை எனவும் கூறலாம். மிஸ். பிங்கிலி விக்காமுடைய உண்மையைக் கூறியபொழுது அவன் சாயம் வெளுத்தது, பொய் தன்னை அம்பலப்படுத்துவது. இனி எலிசபெத் தனக்குத் தெரியாது என்று கூறமுடியாது. தெரிந்தாலும் முடிவு முக்கியம் என்பதை நிலைநிறுத்தும் நிகழ்ச்சி இது. அவனைப் பாராட்டுகிறாள். அவன் குறை அவள் மனத்தைப் புண்படுத்தவில்லை. அழகின் மயக்கத்திலிருந்து எழ வாழ்வு அவளை மண்டையில் அடிக்கிறது. ஷார்லட்டிற்குப் பணமோ, அழகோ இல்லை. நல்லெண்ணமும், விவேகமும் உண்டு. அவற்றை ஏற்பது எலிசபெத். அவளுடைய சேவை அவளின் திருமணத்தை முடிக்கிறது. காலின்ஸ்,

லேடி கேதரினை திருப்திப்படுத்த மிஸஸ் பென்னட் பெண்களில் ஒருவரை மணக்க விரும்புகிறான். லாங்பர்ன் ரோஸிங்ஸ் இணைய விரும்பிய அவன் விருப்பம் பெம்பர்லியுடன் லாங்பர்னை இணைத்தது. லாங்பர்ன் காலின்ஸுக்கு வர இருப்பதாலும், படிப்பு வந்துவிட்டதாலும், மடமை சேவை செய்ய முன்வருகிறது. கதை முடிவில் லேடி கேதரின் திருமணத்தைத் தடுக்க எடுத்த உபாயம், திருமணத்தை முடிக்கிறது. அவள் கர்வம் அழியும் செயல் அது. கார்டினர் தம்பதிகள் வியாபாரத்தில் இருப்பவர்கள். அவர்கள் பெம்பர்லிக்கும், லாங்பர்ன்க்கும் இடையில் வருவது பொருத்தம். இத்தனை நல்ல காரியங்களும் நடக்க ஆரம்பம் லிடியா ஓடிப்போனது. அவளே ஓடிப்போகவில்லை என்றால் கதை இல்லை. வெட்கம் கெட்டவர்களால் பெரிய காரியம் நடக்கின்றது. புரட்சியின் நோக்கில் கதை புதுக் கருத்துகளைக் கூறும். இதை சிருஷ்டியின் தத்துவம் மூலம் அறிவதும், **சொந்த வாழ்வில் பொருத்திப் பார்ப்பதும் பிரம்மத்தை அடைய உதவும் தத்துவம்**. கண்டமான கதை அகண்டமான பிரம்மத்தின் பூலோக முகம். கதையில் முக்கிய அடிச்சுவடுகள் முத்திரை இட்டதைக் காணலாம்.

- ❈ *டார்சி தன்னை மணக்கும்படி எலிசபெத்தைக் கேட்டபின் திருஉருமாற்றம் ஆரம்பிக்கிறது.*
- ❈ *டார்சியின் கடிதம் அவளைத் தன் மனத்தை மாற்றும்படிச் செய்கிறது.*
- ❈ *நல்லது தயாரானால் கெட்டதும் உடன் தயாராகும் என ஓடிப்போனது கூறுகிறது.*
- ❈ *அறிவு உணர்வால் ஆக்கிரமிக்கப்படுவதை Mr. பென்னட் திருமணத்திலும், எலிசபெத் விக்காமை ஏற்பதிலும் காண்கிறோம்.*
- ❈ *புதுப் பணக்காரன் ஜமீந்தாருக்கு அடங்கி இருக்கவேண்டும் என்பதைப் பிங்கிலியில் காண்கிறோம்.*
- ❈ *மனிதன் தன்னை அறிய விரும்பவில்லை. ஆசையை நாடிப் போகிறான். அது அவளை வற்புறுத்தி உள்ளதை உணர வைக்கிறது.*



- ❈ *Mrs. பென்னட்டை மணந்தபின் செய்வது அறியாது திகைத்த கணவன் தவசிபோல் தன்னுள்ளே சென்று மௌனத்தை ஏற்றதால் அடுத்த தலைமுறையில் அவரைப் பிரதிபலிக்கும் இரு குழந்தைகள் பிறக்கின்றன.*
- ❈ *அவர் தவம் முடிந்தபின் தாயாரைப்போல் பெண்கள் பிறக்கின்றனர்.*
- ❈ *மடமையின் அழகை Mr. பென்னட் நாடினார். அவர் எஸ்டேட் படிப்பை நாடிய மடையனுக்குப் போகிறது.*
- ❈ *அழகின் மயக்கம் தெளியாது. எலிசபெத் இறுதிவரை விக்காமிற்குப் பணம் தருகிறாள்.*
- ❈ *நம்மை அறிவு எதிர்கொள்கிறது. நமக்குப் பார்வை வேண்டும்.*
- ❈ ***அறிவைக் கடந்த உணர்விற்குப் பார்வை எழுவது அதிர்ஷ்டமாகும்.***

❏ **ஒரே சூழ்நிலைக்கு உரிய சக்திகள் வெவ்வேறு பலன்களைத் தரமுடியும். முடிவு ஈஸ்வரனுடையது.**

- ❈ *நெதர்பீல்ட் டான்ஸ் டார்சி எலிசபெத்தை மணக்கக் கேட்டது, லிடியா ஓடிப்போனது ஆகியவை எப்படியும் போய் இருக்கலாம்.* **நிகழ்ச்சிகள் போன வழியை நிர்ணயிப்பது சக்தியும்-ஈஸ்வரனும்.**
- ❈ *கதையில் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் இப்படி ஆராயவேண்டும். டார்சி, காலின்ஸ், எலிசபெத்தை மணக்கக் கேட்டது, ஜார்ஜியானா ஓட நினைத்தது, திட்டத்தை மாற்றிக் கார்டினர் பெம்பர்லியைக் கண்டது ஆகியவை இப்படி ஆராயவேண்டியவை.*

❏ **என்ன நடக்கிறது என்பதை அறிவு அறியமுடியாது. அறியாமையின் கருவிக்கு அறிவு புலப்படாது.**

- ❈ *டார்சி மனம் மாறிவருகிறது என்றோ, லிடியா ஓடத் திட்டம் இடுகிறாள் என்றோ எலிசபெத்திற்குத் தெரியாது.*

❏ **பிரம்மம் உலகில் சிறு நிகழ்ச்சிகளில் தன்னைக் கண்டமாக வெளிப்படுத்துகிறது.**

- ❈ *கரோலினை மணக்காமல், எலிசபெத்தை டார்சி மணப்பது புரட்சி. டார்சி, எலிசபெத் குணவிசேஷம் மூலம் இவர்கள் திருமணத்தில் புரட்சி தன்னைப் பூர்த்தி செய்கிறது.*

❑ **அனந்தம் நம் அறிவிற்கு ஏற்ப நடக்கவேண்டிய அவசியம் இல்லை. நாம் அறிந்த வழிகளில் அது செயல்பட வேண்டிய நிர்ப்பந்தம் அதற்கு இல்லை. நம் எண்ணம் நாமே ஏற்படுத்தியது, தார்மீகமாக நாம் செயல்படுகிறோம். நாணயம் என்பது சிறிய லட்சியம். நம் அறிவிற்குப் பொருத்தம் இல்லாததை அனந்தம் ஏற்கும். முடிவிற்கு அவசியம் என்பதால் அர்த்தமற்ற செயலை அனந்தம் ஏற்கும்.**

- ❈ *டார்சிக்கு எலிசபெத்மீது காதல் இருந்தால் 'பரவாயில்லை' என்று அவன் கூறக்கூடாது. அவளை அணுகி அவன் டான்ஸ் ஆடக் கேட்கவேண்டும். அது நமக்குப் புரியும்.*
- ❈ *ஆண் பெண்ணை மன்றாடிக் கேட்கவேண்டும் என்ற கருத்து நாமே ஏற்படுத்தியது.*
- ❈ *பிங்கிலிக்குத் திருமணமே முடிவு என்பதால் அவனுக்கு அது சரி.*
- ❈ *எலிசபெத் புரட்சித் தலைவி. தாயாரின் குணத்தைக் கடக்க முயல்பவள். அதனால் வழக்கமான முறைகள் அவள் இலட்சியத்தைப் பூர்த்தி செய்யாது.*
- ❈ *டார்சியின் சுயநலமும், எலிசபெத்தின் மயக்கமும் தீர திட்டுவது அவசியம்.*
- ❈ *ஓடிப்போவது உலகத்திற்குத் தவறு. டார்சி அடிமட்டம்வரை இறங்கிவந்து ஆணவம் அழிய அது தேவை.* **முடிவாக அது நன்மை செய்தது.**

❑ **அறிவிற்குப் பொருத்தம் இல்லாதது என்று நமக்குத் தோன்றுவது முழுமைக்குத் தேவை.**

- ❈ *எந்தக் குடும்பமும் பெண் ஓடிவிடவேண்டும் என நினைக்கமாட்டார்கள். முடிவைக் கருதும்பொழுது அது பொருத்தம் என அறிகிறோம். லிடியாவும், விக்காமும் ஓடிப்போனதைக் குறையாக நினைக்கவில்லை. Mrs. பென்னட்டிற்கும் குறையாகத் தெரியவில்லை.*



❑ **அறிவு தேவையானதை எடுத்துக்கொள்ளும், மற்றதைக் கண்டுகொள்ளாது.**

- ❈ *விக்காம் சொல்வதை எலிசபெத் ஏற்றுக்கொள்கிறாள். தவறு தெரியவில்லை.*
- ❈ *பெண்ணுக்கு வரதட்சணைத் தர குறைப்படும் பெற்றோர் பிள்ளைக்குக் கேட்காமல் இருப்பது இல்லை.* **இந்தப் பரீட்சையில் தேறியவர் பகுத்தறிவுவாதி.**
- ❈ *அனந்தத்திற்கு இந்த சட்டமோ, எந்தச் சட்டமோ கிடையாது.*
- ❈ *நேரு, இந்திரா, ராஜீவ் பிரதமரானது இந்தச் சட்டப்படி இல்லை.*
- ❈ *பிள்ளையைப் பெற்றவள் சீதனம் கேட்காமல் திருமணச் செலவை ஏற்கிறாள் என்பது உலகமறிந்த எந்தச் சட்டத்திற்கும் உட்படாது.*
- ❈ *விக்காமைத் தேடவேண்டும் என்று டார்சியின் கடமையாகுமா?*
- ❈ *வாழ்வில் அவை அனந்தம், நம் வாழ்விலும் ஏராளமாக உண்டு.*
- ❈ *நமது முடிவு மாறும்.*
- ❈ *நமது முடிவு மனிதனைத் தெய்வமாக்கும்.*

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

கரணங்கள் முரண்பாடானவை. அவற்றை ஒத்துழைக்கச் செய்தால் முரண்பாடு குறைந்து தகராறாகிறது. ஒத்துழைக்க விரும்பினால் சுமுகம் எழும். ஒற்றுமை எழுந்தால் சுமுகம் உயரும். பூரண முழுமை ஒற்றுமையை இனிமைமூலம் சைத்தியப்புருஷனில் ஏற்படுத்துகிறது.

***பூரண முழுமையின் ஒற்றுமை சைத்தியப்புருஷனின் இனிமை.***

# யோக வாழ்க்கை விளக்கம் V

கர்மயோகி

**824) தன் நிலைக்கேற்ற உந்துதலை மனிதன் விரும்பி நாடுகிறான். யோகம் பரிணாமத்திற்குரிய ஆர்வம். மனிதகுலத்தால் விரும்பி ஏற்க இயலாததொன்றாகும்.**

*மனிதன் தனக்குரிய ஆசைகளை நாடுகிறான்.*

*இறைவனை நாடும் ஆர்வம் பூரணயோகம்.*

குழந்தை பொம்மைகளை விரும்பும், புத்தகத்தை நாடாது. சிறுவர்கள் விளையாட்டை நாடுவர், படிப்பை நாடமாட்டார்கள். மனிதர்கள் அனைவரும் விரும்பும் பொழுதுபோக்கை நாடுவர். இறைவனை நாட பேரார்வம் தேவை. பொதுவாக அது மனிதனுக்கில்லை. அதனால் பூரணயோகத்தை எவரும் நாடுவதில்லை.

❀❀❀

**825) சிருஷ்டியில் பரம்பொருளோடு ஐக்கியமானவனுக்கு யோகம் விருப்பமுடையதாக இருக்கும். ஏற்கனவே சொல்லியவை அந்தந்த நிலைக்குரியவனுக்கு விருப்பமுடையதாக இருக்கும்.**

*பூரணயோகம் பரம்பொருளோடு ஐக்கியமானவனுக்குரியது.*

பூரணயோகத்தை ஆரம்பிக்க, மனிதன் மோட்சத் தகுதி பெற்றிருக்கவேண்டும். முதல் சித்தியின் மூன்று பாகங்கள்: 1. நெஞ்சில் இறைவனைக் காண்பது, 2. உலகில் அவனைத் தரிசனம் செய்வது, 3. மேலுலகில் இறைவனைக் காண்பது. இவற்றுள் ஒன்றிருந்தால் மோட்சம் பெறலாம். பொதுவாக அந்த ஒன்றும் மோட்சம் பெற்றபின் பெறுவதாகும். இது மனிதனுக்குரிய யோகமில்லை, இறைவனுக்குரியது என்கிறார்.

❀❀❀



**826) எதனோடு நீ ஐக்கியப்பட்டிருக்கிறாயோ, அதுவே நீயாகும். இன்று நீ உணர்வாலான மனிதன் அல்லது மனத்திற்குரியவன். யோகத்தை மேற்கொண்டால் நீ வளரும் ஆன்மாவாகிறாய். வளரும் பரம்பொருளாகவும் ஆகலாம். முன்னோர்கள், சிருஷ்டிக்கு முன்னுள்ள பரம்பொருளை அடைந்தனர். நாம் சிருஷ்டியில் பரம்பொருளாக மாறமுடியும்.**

*நாம் சிருஷ்டியில் பரம்பொருளாக மாறமுடியும்.*

நாம் சிருஷ்டியில் மனமாக இருக்கிறோம். மனிதர்களில் பலர் உணர்வாகவும், உடலாகவுமிருக்கிறார்கள். இதுவரை யோகம் மனிதனுக்கு அளித்த வரம், உடலைவிட்டுப் போய் மோட்சம் அடைவது. ஸ்ரீ அரவிந்தம் மனிதனை, உலகிலேயே உயர்த்தி முடிவுவரை கொண்டுபோக வழி அமைக்கிறது. உதாரணமாகச் சொன்னால் இன்று கிராமத்தில் கூலிக்காரன், குத்தகைக்காரன், குடித்தனக்காரன், தச்சன், வண்ணான் போன்றவர்கள் உண்டு. இவர்கள் நிலை உயர கிராமத்தைவிட்டுப் போய் படித்து, ஆபீசராகவோ, என்ஜினீயர், டாக்டர், பேராசிரியர், வக்கீல் போலாகலாம். கிராமத்திலேயே வக்கீலாக முடியாது. அதிகபட்சம் பள்ளி ஆசிரியராகலாம். புது நிலைமை வந்து கிராமத்திலேயே வக்கீல், பேராசிரியர் போன்ற பதவிகள் வரவேண்டுமானால், கிராமத்திற்கு கோர்ட், கல்லூரி போன்றவை வரவேண்டும். ஸ்ரீ அரவிந்தம் மனிதனுக்குத் தருவது, கிராமத்திலேயே ஹைகோர்ட் ஜட்ஜ், முதன்மந்திரி, பெருந் தொழிலதிபர் ஆகமுடியும் எனில் கிராமம் பெருநகரமாகவேண்டும்.

**827) புற நிகழ்ச்சியால் உந்தப்படுவது மனித சுபாவம். புறச் சூழ்நிலையின்றி, தானே உள்ளிருந்து செயல்படுபவன் தவறாது வெற்றி பெறுவான். உள்ளேயும் ஆரம்பிக்க மறுப்பவன் இறைவனை எதிர்பார்ப்பவன். அவன் இறைவன் திட்டப்படி நடப்பவன்.**

உலகத்தையொட்டி நடப்பவன் மனிதன். தானே ஆரம்பித்து செயல்படுபவன் முன்னோடி, தலைவன். மனிதன் உலகத்தாலும், பக்தன் தானேயும் செயல்படுகிறார்கள். இதைக் கடந்த இடம் உண்டு. இவையிரண்டாலும் செயல்பட மறுத்தால், இறைவன் நம்முள் செயல்படுவான். அதற்கு அந்தராத்மாவின் குரல் எனப் பெயர்.

❀❀❀

*தொடரும்.....*

## ஜீவிய மணி

**சிறு துளி உயர்வு பெற பெரு வெள்ளமான சேவை தேவை. பெரு வெள்ளம் தரும் சிறு துளி.**

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நீ ஆச்ரயிப்பதை நீ அடைவாய் என்பது ஆன்மீக உண்மை. உன் மனத்தின் சூழலில் எழுவதை உனக்கு அமைந்த அதிகபட்ச வாய்ப்பு என இதிலிருந்து கூறலாம். சமூகச் சூழலிலும், யதார்த்தத்திலும் (physical), மனத்தின் சூழலிலும், ஆன்மீகச் சூழலிலும் எழுபவை நமக்கு அந்த அந்த நிலைகளில் ஏற்படும் அதிகபட்ச வாய்ப்பு எனலாம். உரிய முயற்சி முழுப் பலனைத் தரும். உதாரணமாக யதார்த்தமான வாய்ப்புக்கு உடலுழைப்புத் (physical) தேவை.

***உரிய முயற்சி முழுப் பலனைத் தரும்.***
***முயற்சியை முழுவதும் முடித்தவனுக்கு முழுப் பலன் தவறாது உண்டு.***



## அன்பர் கடிதம்

**அளவற்ற அன்பும், எல்லையற்ற கருணையும்கொண்ட ஸ்ரீ அன்னையின் கமலப்பாதங்களில் இக்கட்டுரையை சமர்ப்பிக்கிறேன்.**

நான் 1983ஆம் வருடம் பாண்டிக்கு அருகிலுள்ள ஒரு சிறு ஊரில் இருந்தேன். அங்கிருந்துகொண்டு விழுப்புரத்திலும், பிறகு கடலூரிலும் வேலை பார்த்து வந்தேன். தினமும் பாண்டி வந்துதான் செல்லவேண்டியிருந்தாலும், அங்கிருந்த 2 வருடங்களில் நான் அன்னையை அறிந்ததில்லை. என் கணவர் பாண்டியில் பார்த்துவந்த வேலையை விட்டுவிட்டு மயிலாடுதுறையில் ஒரு வேலையில் சேர்ந்துவிட்டார். எனக்கு மயிலாடுதுறைக்கு மாற்றல் கிடைக்கவில்லை. தினமும் கடலூர் சென்றுவரவும் முடியவில்லை. எனவே 10 மாதங்களுக்கும் மேலாகச் சம்பளமில்லா விடுப்பில் இருந்தேன். அப்போதுதான் அமுதசுரபியில் அன்னையைப் பற்றிய கட்டுரையைப் படித்தேன். உடனே அன்னையிடம் எனக்கு மாற்றல் கிடைக்க வேண்டிக்கொண்டு ஒரு தொகையை காணிக்கையாக (சரியான முகவரி தெரியாத நிலையில்) ஆசிரமத்திற்கு அனுப்பிவைத்தேன். மணியார்டர் acknowledgement எனக்குக் கிடைக்கும் முன்பே, எனக்கு மயிலாடுதுறையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அலுவலகத்திற்கு மாற்றல் உத்தரவு தபாலில் வந்தது. அந்த அலுவலகம் மூன்று மாதம் கழித்து மூடப்பட்டபோதும் அதே ஊரில் உள்ள வேறொரு அலுவலகத்தில் எனக்கு போஸ்டிங் கிடைத்ததும் அன்னையின் அருளினால்தான்.

இதேபோல் மற்றொருமுறை சேலத்திலிருந்து, சிதம்பரத்திற்கு டிரான்ஸ்பர் கேட்டேன். நான் சேலத்திலும், என் கணவர் சேத்தியாத்தோப்பிலும், என் மகன் சீர்காழியிலுமாக இருந்தோம். அப்போது, ஓரிடத்தில் கட்டாயம் ஒரு வருடம் பணிபுரிந்தால்தான் மாற்றல் கொடுக்கலாம் என அரசாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. என் குடும்பச் சூழ்நிலையின் காரணமாக எனக்கு ஒரு வருடத்திற்குள் மாற்றல் வழங்கலாம் என P&R Departmentலிருந்து அனுமதி கிடைத்தது. எனினும் சிதம்பரத்தில் vacancy இல்லாததால் எனக்கு டிரான்ஸ்பர் கிடைக்கவில்லை. வேறொருவரைத் தூக்கிவிட்டு வரவும்

எனக்கு விருப்பமில்லை. அன்னையிடம், ''சட்டப்படி ஒரு வருடம் கழித்தே எனக்கு மாற்றல் கொடுங்கள். என்னால் யாரும் disturb ஆகக்கூடாது'' என வேண்டிக்கொண்டேன். ஒரு வருடம் கழித்து எனக்குச் சிதம்பரம் அருகிலுள்ள காட்டுமன்னார்கோயிலுக்கு மாற்றல் கிடைத்தது. அப்போது அங்கு அடிக்கடி கலவரம் ஏற்பட்டு, திடீர், திடீரென பஸ் போக்குவரத்து பாதிக்கப்பட்டு வந்தது. அங்கு எப்படிச் சென்று பணி புரியப்போகிறோம் என நினைத்துக்கொண்டே, சேலத்திலிருந்து ரிலீவ் ஆகி காட்டுமன்னார்கோயில் அலுவலகம் சென்றேன். அங்குள்ளவருக்கு, வேறோர் இடத்திற்கான போஸ்டிங் ஆர்டர் வரவில்லை. அது வந்து, அவரை ரிலீவ் செய்தபிறகே நீங்கள் ஜாயின் பண்ணமுடியும் எனத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். என்னுடைய ஒரு வார ஜாயினிங் டைம் முடியும்வரையிலும் அவருக்கு போஸ்டிங் ஆர்டர் வரவில்லை. அன்னையிடம், ''இன்னொருவரை நான் டிஸ்டர்ப் பண்ண விரும்பவில்லை. அதேசமயம் என்னுடைய ஜாயினிங் டைம் முடிந்துவிட்டதால் நான் இன்று கட்டாயமாக வேலையில் சேரவேண்டும். அனைத்தும் உன் அருள்'' என வேண்டிக்கொண்டு கடலூரிலுள்ள உயர்அதிகாரியின் அலுவலகம் சென்றேன். அந்த அலுவலகத்தின் போர்டிகோவிலேயே ஓர் ஊழியர் என்னிடம், ''சிதம்பரத்தில் புதிதாக ஓர் அலுவலகம் ஒரு வாரத்திற்குமுன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதில் காலியிடம் உள்ளது. இவர்தாம் அதற்கும் இன்சார்ஜ். எனவே நீங்கள் சேரலாம்'' என்றார். அப்படியே நடந்தது. அன்னையால் மட்டுமே இப்படிப்பட்ட அற்புதங்களை நிகழ்த்த முடியும்.

இதேபோல் என் பல கோரிக்கைகள், அவை நியாயமாகவும், நேர்மையாகவும் இருக்கும்பட்சத்தில் உடனுக்குடன் அன்னையின் கருணையினால் நிறைவேறி இருக்கின்றன. ஒவ்வொரு குழப்பமான சூழ்நிலையிலும் மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டியின் நூல்களில் ஏதாவது ஒன்றை பிரித்துப் பார்ப்பேன். கண்ணில்படும் வரிகள் அதற்குத் தீர்வாக இருக்கும்.

ஸ்ரீ அன்னையை அறிமுகப்படுத்திய ஞானகுருவிற்கு எனது பணிவான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

❀❀❀



## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

அண்ணன் - ஒருவரால் அதைச் செய்யமுடியுமானால் இரண்டு காரியங்கள் பூர்த்தியாகும்.

- **அந்நூல் வாழ்வுக்குரிய Life Divine எனப்படும்.**
- **மனிதன் உடனே செயல்படுவான்.**

தம்பி - ஸ்ரீ அரவிந்தர் ஆன்மீகத்தை அறிவுக்குப் பொருந்துமாறு கூறினார். நாம் அறிவுக்குப் பொருந்திய ஆன்மீகத்தை வாழ்வில் பொருத்திக் கூறவேண்டும்.

அண்ணன் - தத்துவம் சுலபம்.

- **சர்வம் பிரம்மம்.**
- **மனிதன் தோற்றத்தைப் பார்ப்பதால் பிரம்மம் தெரிவதில்லை, ரூபம் தெரிகிறது.**
- **சர்வ ஜீவராசிகளும், பொருள்களும் பிரம்மத்தை நோக்கிச் செல்கின்றன.**
- **சமூகம் பிரம்மம்.**
- **மனிதன் பிரம்மம்.**
- **மனிதன் சமூகத்தை மனிதகுலமாகவும், தன்னை உடலாகவும் காண்கிறான்.**
- **கையிலுள்ள பிரச்சினை பணம்.**
- **பிரம்மமான சமூகம் தன்னை முழுமையாகவே மனிதனுக்குத் தரும்.**
- **தன் பணத்தைச் சமூகம் பிரவாகமாகப் பெற்றுள்ளது.**

✡ **சமூகத்தால் மனிதனுக்குத் தன் எல்லாப் பணத்தையுமே தரமுடியும், பகுதியாகத் தரமுடியாது.**

✡ **எல்லாப் பணமும் - காற்றுபோல் - மனிதனுக்குப் பயன்படாது.**

✡ **இன்று மனிதன் பணம் முக்கியம் என நினைக்கிறான்.**

✡ **தனக்கும், சமூகத்திற்கும் உள்ள அனந்தமான ஆன்மீகத் தொடர்பை மனிதன் ஏற்படுத்தினால் ஏராளமாக அவன் பணம் பெறமுடியும்.**

✡ **பணத்தில் அனந்தத்தைக் கண்டவன் மனத்திலும் கண்டு, முடிவாக அனந்தனை அடையவேண்டும்.**

✡ **இன்று மனிதன் ஆன்மீகப் பூரணம் பெற பணம் ஒரு கருவி.**

✡ **பேராசையால் பணத்தை நாடுபவனுக்கு இங்கு வேலையில்லை.**

✡ **அவன் பேராசையே அவனைத் தடுக்கும்.**

தம்பி - தத்துவம் எனக்குப் புரிகிறது. இதை அனைவருக்கும் எடுத்துச்சொல்லும்பொழுது எழும் கேள்விகட்கும் பதில் கூறவேண்டும். முதல் கேள்வி,

*சமூகம் தன்னை முழுவதுமே கொடுக்கும்;*

*அதனிடம் பெரும் பணம் உண்டு;*

*அதனால் மனிதனுக்குத் தன் முழுப் பணத்தையுமே தரமுடியும்.*

இதன் எல்லா அம்சங்களையும் விவரிக்கவேண்டும்.

அண்ணன் - இதன் அடிப்படைகள்,



❊ ரு.100/- நோட்டை நமக்கு ஒருவர் கொடுப்பது சமூகத்திற்குப் பணத்தின் முழு சக்தியுண்டு என்பதை அறிவிக்கிறது. இல்லையேல் அதை நாம் பெற்றுக்கொள்ளமாட்டோம்.

❊ **பிரம்மம் தன்னை முழுமையாகக் கொடுப்பதுபோல் சமூகம் தன்னை முழுமையாகக் கொடுக்கிறது.**

❊ கொடுப்பது முழுமையானால், பெறுபவர் பகுதியாகப் பெறலாம்.

சூரியன் தன் ஒளியை வெள்ளமாகத் தரும்பொழுது நாம் அத்தனையும் பெறலாம். அல்லது வீட்டிற்குள் வந்தபின் ஒரு சிறிது பெறலாம். எந்த நேரமும் நாம் வீட்டைவிட்டு வெளியில் போய் முழுச் சூரிய ஒளியைப் பெறலாம் என்பது பிரம்மம், சமூகம், பள்ளி, மார்க்கட் ஆகியவற்றிற்கும் பொருந்தும்.

ஆயிரம் ஆண்டுகட்குமுன் சமூகத்திற்குப் பணபலம் குறைவு. இன்று அது ஆயிரம் மடங்கு அதிகப்பட்டுள்ளது. அன்று சமூகத்திற்கு உண்டான பலம் physical power, உடலின் சக்தி, பிறரைக் கொலை செய்யும் சக்தி, சிரச்சேதம் செய்வது, அடி, தடி, சண்டையே முக்கியம். அந்தச் சண்டை போடும் சக்தி எல்லாம் இன்று பணபலமாகிவிட்டது. அன்று அடித்தார்கள், கொலை செய்தார்கள். இன்று அபராதம் போடுகிறார்கள். இந்தியாவில் ரிஸர்வ் பேங்க் 1935இல்தான் ஏற்பட்டது. நோட்டு பிரபலமானது அதற்குப் பிறகுதான். அதன்முன் வெள்ளி ரூபாய்தான் நாணயம். நோட்டு வருவதற்குமுன் பணப்புழக்கம் குறைவு. பணம் ஏராளமாகப் பெருகிவிட்டது.

ஆகாயம் தன் காற்றை முழுமையாகவே தரும். கடல் குளிப்பவனுக்குத் தன்னை முழுமையாகவே தருகிறது என்பதுபோல் சமூகம் தன் சொத்துகளை - கல்வி, பணம், பாதுகாப்புப் போன்றவற்றை - தனிமனிதனுக்கு முழுமையாகவே தருகிறது. பெறுபவன் தன் தேவை பூர்த்தியாகும்வரை பெறுகிறான்.

நோட்டு ஏற்படுமுன் சர்க்கார் 1 நூறு ரூபாய் நோட்டை அடிக்க முடியாது, அடிப்பதில்லை, அடித்துக் கொடுத்தால் அதை யாரும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். சர்க்காருக்குப் பணபலம் ஏற்படும்வரை நோட்டு அடிக்கும் உரிமையில்லை. ஒரு நோட்டை நாம் பெற்றுக்கொள்கிறோம் என்றால், சர்க்காருக்கு நோட்டு அடிக்கும் திறன் வந்துவிட்டது, முழுப் பணபலம் வந்துவிட்டது எனப் பொருள்.

நெய்வேலியிலிருந்து நம் வீட்டிற்கு 600 யூனிட் கரண்ட் வருகிறது எனில் 600 யூனிட் மட்டும் உற்பத்தி செய்து அனுப்புவதாக அர்த்தமில்லை. அதைப்போல் ஆயிரமாயிரம் மடங்கு கரண்டு உற்பத்தியானால்தான் நமக்கு 600 யூனிட் வரும். நாம் 600 யூனிட் மட்டும் பெறவேண்டும் என்பதில்லை, 6000 யூனிட்டும் பெறலாம். சர்க்காரிடமிருந்து - சமூகத்திடமிருந்து - நாம் எத்தனை கோடி வேண்டுமானாலும் பெறலாம் என்ற தத்துவம் பேசினால் எடுபடாது. “என்னால் சம்பளமாக 10,000 ரூபாய்தான் பெறமுடிகிறது. நான் எப்படி ஒரு கோடி ரூபாய்க்கு சம்பளமாகப் பெற உழைக்க முடியும்” என்று கேள்வி எழும். உத்தியோகம் செய்தால் சம்பளம் ரூ.10,000. 1 கோடியை சமூகத்திலிருந்து பெற வேலை



செய்வதில்லை. அதை நாம் நம் value, பண்புகள்மூலம் பெற நாம் என்ன செய்யமுடியும் என்பதைக் கடைசி பக்கத்தில் எழுதுகிறேன். நாம் மனதால் Good will, நல்லெண்ணம் உற்பத்தி செய்தால் அதற்குரிய தொகை நமக்கு வரும். 1 கோடி வேண்டுமானால் அந்த அளவுக்கு நல்லெண்ணம் மனதில் உற்பத்தியாக வேண்டும்.

Perception, sensation, conception என்ற சொற்களை பகவான் பயன்படுத்துகிறார். அதைக்கொண்டு இதை விளக்கலாம். மேற்சொன்ன கருத்து தெளிவாக அறிவுக்குப் புரிவது conception, உணர்வுக்குப் புரிவது perception, கையில் ரூபாய் வருவது sensation.

நாம் ஒரு கம்ப்யூட்டர் வாங்கி அதில் கடிதம் டைப் செய்கிறோம். நாம் கற்றுக்கொண்டது அதுதான். ஆனால் கம்ப்யூட்டர் ஒரு லெட்டர் டைப் செய்ய உதவும் கம்ப்யூட்டராகவே செயல்படுகிறதே தவிர, டைப்ரைட்டர்போல செயல்படவில்லை. லெட்டர் மட்டும் நாம் டைப் செய்வதால், கம்ப்யூட்டருக்கு லெட்டர் மட்டும்தான் டைப் செய்யத் தெரியும் என்பதில்லை. கம்ப்யூட்டர் லெட்டர் டைப் செய்வதைப்போல் 100 மடங்கு, 1000 மடங்கு திறனுடையது. நம் திறமை குறைவாக இருப்பதால் கம்ப்யூட்டர் சிறிய பயன் தருகிறது. நாம் முழு கம்ப்யூட்டரைப் பயன்படுத்தக் கற்றுக்கொண்டால் முழுப் பயன் பெறலாம்.

**சமூகம் கம்ப்யூட்டர்போன்றது.**
**நாம் பெறும் வருமானம் லெட்டர் டைப் செய்வதுபோன்றது.**

சமூகம் பொருள்கள், சேவை (goods & services) உற்பத்தி செய்தது. பணம் அவற்றைப் பிரதிபலித்தது என்றோம். அடுத்தாற்போல் சமூகம் values, பண்புகளை உற்பத்தி செய்ததைப் பணம் பிரதிபலித்தது. ஒரு மனிதன் பொருள்களை அளவோடு உற்பத்தி செய்ய முடியும், அளவோடு பயன்படுத்த முடியும். சேவையும் அப்படியே. ஆனால் values, பண்புகளை உற்பத்தி செய்யவோ, பயன்படுத்தவோ அளவு கிடையாது.

எந்த மனிதனால் இப்பண்புகளை அளவிறந்து உற்பத்தி செய்ய முடிகிறதோ, அவனால் சமூகத்திலிருந்து அளவுகடந்து பணம் பெறமுடியும்.

இன்று தொழிலதிபர்கள் கோடிக்கணக்காகச் சம்பாதிக்கிறார்கள் எனில் அவர்கள் goods பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். 3 நடிகர்களை ஒரு விழாவுக்கு வர அழைத்தனர். காலை, மாலை, இரவு என ஒவ்வொருவரும் 5 நிமிஷம் மேடைக்கு வரவேண்டும். மூன்று பேரும் சேர்ந்து 25 இலட்சம் கேட்டனர். சேவை செய்பவர்கள் அதிக வருமானம் பெறுகிறார்கள். Values, பண்புகளை அளவில்லாமல் உற்பத்தி செய்பவர்கள் அளவில்லாமல் பயன் பெறுவர்.

இது நம் வாழ்வில் நடக்கவேண்டுமானால் சமூகம் எப்படிப் பணத்தை உற்பத்தி செய்கிறது என முதலில் தத்துவரீதியாகப் புரிந்துகொள்ளவேண்டும். பிறகு அதை உணர்வால் புரிந்துகொள்ளவேண்டும். இரண்டு கட்டமும் தாண்டினால் பலிக்கும்.

ஏற்கனவே சமூகம் தான் பெற்ற பணத்தை இனி தானே பெருக்கிக்கொள்ளும் திறன் பெற்றுள்ளது



என்று கூறினோம். அதேபோல் மனிதன் தான் பெற்றுள்ள பணத்தை தானே பெருக்கிக்கொள்ளும் திறன் பெறுவான். சமூகத்தில் அனைவரும் பெறும்பொழுது அவனுக்கும் அத்திறன் வரும்.

ஒருவரிடம் 1 கோடி இருந்தாலும், 1 இலட்சமிருந்தாலும், 1 ஆயிரமிருந்தாலும், அது தானே பெருகும் என்பது சட்டம். சமூகம் பெற்றபின் நாமும் பெறலாம். சமூகம் பெறுமுன் இத்திறமையை நாம் பெற, சமூகம் இத்திறனை எந்த உற்பத்தி ஸ்தானத்திலிருந்து பெறுகிறதோ அந்த உற்பத்தி ஸ்தானத்துடன் நாமும் தொடர்புகொள்ள முடியுமா எனக் காணவேண்டும். முடியுமானால், நாமும் அத்திறனை இன்றே பெறலாம். அந்த உற்பத்தி ஸ்தானம் Good will, நல்லெண்ணம். அது ஆன்மாவின் 12 அம்சங்களில் ஒன்று. சமூகம் நல்லெண்ணத்தால் பணத்தைப் பெருக்குவதால், நல்லெண்ணத்தின் ஆதியுடன் தொடர்புகொண்டால், சமூகத்தில் இத்திறன் பரவி அனைவருக்கும் வரும்முன் நமக்கு அத்திறன் - பணத்தைப் பெருக்கும் திறன் - வரும்.

*தொடரும்.....*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அன்னையின் சக்தியை ஒரு நிலையில் எழுப்பினால், அதைப் பெறத் தயாரான நிலை, அதைப் பெற்றுக்கொள்கிறது.

***எழுப்பிய சக்தியை ஏற்பது தயாரான நிலை.***

# இதுவோ உம் ரௌத்திரக் கருணை!

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

‘‘வெளியே அவர்கள் வீட்டு வாசலில் நின்றவளைப் பார்த்துச் சிரித்தேன். அவளும் சிநேகிதமாய் ‘இங்கே வாயேன்’ என்று அழைத்தாள். அப்போது என் வீட்டினர் ஏன் அவள் வீட்டினருடன் பழகுவதில்லை என விசாரித்தேன். அவர்கள் ஆசிரமவாசிகளுடன் நட்புள்ளவர்கள் என்பதால், என் மாமாவிற்கு அது பிடிக்காததால் பேச்சில்லை என்று விளக்கினாள். அப்படி ஆசிரமத்தில் என்னதான் இருக்கிறது என்று கேட்டபோது, ஸ்ரீ அன்னையைப் பற்றிக் கூறி, அவர் தெய்வாம்சம் கொண்டவர் என்றாள். அவர் யார் என்ற விபரம் கூற முடியுமா என்று அவளைக் கேட்டபோது ஒரு சாஸ்த்திரியார் வந்தார். அவர், ‘என்னிடம் கேளம்மா, சொல்கிறேன். அவர் பராசக்தியின் அவதாரம். முடிந்தால் நீயே ஆர்வப்பட்டு அவரைத் தரிசி’ என்றார். அதன்பிறகு அங்கு நான் போக முடியவில்லை என்றாலும் அன்னை பிரெஞ்சு தேசத்தவர் என்றும், பிரெஞ்சில் அவர் எழுதியதைப் படித்தால் புரியும் என்றும் கூறினாரே, அதை மறக்கவில்லை. அதற்காகவே பிரெஞ்சு கற்கிறேன். இது என் வீட்டாருக்குத் தெரியாது. நீயோ ஆசிரமத்திலிருப்பதாய்ச் சொல்கிறாய். அன்னையைப் பற்றி உன்மூலம் அறியலாமே என்ற மகிழ்ச்சியில்தான் உன்னை எனக்காகவே இங்கு அனுப்பியுள்ளதாய்க் கூறினேன்’’ என்றாள் உமா.



“உமா! உன்னையும் அன்னை எனக்காகத்தான் பிரெஞ்சு கற்க அனுப்பியுள்ளார். பகவானையும், அன்னையையும் உணராத இவ்வூர் மக்களிடையே அருமை தெரிந்த நீ கிடைத்திருப்பதும் என் பாக்யம்தான்” என்றாள் ப்ரீத்தி.

அன்றிலிருந்து ப்ரீத்தி இங்கு வந்தது, அவள் அனுபவம், உமாவின் தேடல் போன்றவை அவர்கள் பேச்சுப் பொருளானது.

“உமா இன்று வகுப்பில் ஆசிரியர் முதன்முதலில் கூறிய அந்த வாக்கியத்தைக் கவனித்தாயா? அது யாருடைய வார்த்தை என்று தெரியுமா?” என்றாள் ப்ரீத்தி.

‘‘அது யாருடைய வார்த்தை? உனக்குத் தெரியுமா?’’ என்றாள் உமா.

“அது சாட்சாத் நம் ஸ்வீட் மதர் வார்த்தைதான். வேறு யாரால் அந்த அற்புத வார்த்தையைச் சொல்ல முடியும்” என்கிறாள் ப்ரீத்தி.

“ஆமாம் ப்ரீத்தி. நீ சொல்வது உண்மைதான். கடவுளை வேண்டினால் வேண்டியது கிடைக்கும் என்றுதான் கடவுள் வாழ்த்துத் தொடங்கும். ஆனால் இங்கு எடுத்த எடுப்பில் அவரோடு எல்லாம் ஆனந்தம் என்று சொல்லப்பட்டிருப்பது கடவுளால்தான் கூற முடியும்”.

“நீ என்ன சொல்கிறாய் உமா?” என்றாள் ப்ரீத்தி.

“இல்லை ப்ரீத்தி. எப்போதும் எதையும் கடவுள் வாழ்த்துடன் தொடங்குவோம். பள்ளிக்கூடத்திலும் கடவுளை வணங்கச் சொல்லித் தருவார்கள். கடவுள் வல்லவர் என்பதால் அவரால் நாம் எதையும் பெறமுடியும் என்று பயன் கருதி வழிபடும் வழிபாடுதான்

படித்திருக்கிறேன். அவரில்லாத வாழ்வு சத்தற்ற வாழ்வு என்று அன்னைதானே சொல்லிக்கொடுத்தார்'' என்கிறாள் உமா.

''உமா! எனக்குக்கூட ஒரு நிகழ்ச்சி, அதுவும் என் குழந்தைப் பருவத்தில் நிகழ்ந்தது நினைவுக்கு வருகிறது'' என்றாள் ப்ரீத்தி.

"சொல் ப்ரீத்தி. என்ன நிகழ்ச்சியது?" என்றாள் உமா.

''என் ஒன்பது அல்லது பத்து வயதில், நானும், என் அண்ணனும் மாலை வேளையில் எங்கள் ஊர் வயல்புறத்தில் நின்று வேடிக்கை பார்த்தோம். அப்போது என் அண்ணன் என்னைவிட மூன்று வயதே பெரியவன், திடீரென்று என்னிடம் எங்கள் அம்மாவும், அப்பாவும் எங்கள் உண்மையான அம்மா, அப்பா அல்லர் என்றான். எனக்குக் கவலை வந்துவிட்டது. 'அப்படியானால் நம் உண்மையான அம்மா, அப்பா யார்?' என்று அழ ஆரம்பித்தேன். 'மேலே உள்ள பகவானும், பகவதியும்தான் நம் உண்மையான அம்மா, அப்பா' என்றான். 'அவர்களை நாம் பார்க்க முடியாதே' என்றேன். 'தினமும் பிரார்த்தனை செய்தால் பார்க்கலாம்' என்று பெரிய மனுஷன்போல் சொன்னான். அப்போதெல்லாம் என் தந்தை தன் பூஜையறையில் ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர் படங்களை வைத்திருப்பார். அவர்களைப் பார்க்கும்போது, அவரை நேரில் பார்க்க ஆவல் அடக்கமுடியாமல் தவிப்பேன். ஏன் பிறந்தோம், என்ன ஆவோம் என்ற பயம் அடிக்கடி எழும். உடனே பகவானை, பகவதியை நினைப்பேன். திடீரென்று 1941இல் எங்கள் தந்தையுடன் ஆசிரமத்திற்கு வரும் வாய்ப்புக் கிடைத்தது. ஆகஸ்ட் 15 தரிசன நாளில் பகவானையும், ஸ்ரீ அன்னையையும் தரிசித்தவுடன், அன்று சிறு வயதில் என் அண்ணன் ஆகாயத்தை நோக்கி கைகாட்டிய பகவானும், பகவதியும் இவர்களே என்று என் உள்ளுணர்வு கூறியது. பிறகு



ஊருக்குத் திரும்பிவிட்டோம். மாலை வேளை வந்துவிட்டாலே அனாதரவாய் உணரலானேன். ஏன் பிறந்தோம்? எங்கே செல்வோம்? மகிழ்ச்சியில்லாத மனநிலை உருவாகிவிடும்.

மீண்டும் இங்கு ஆசிரமம் வந்தபோது இங்கு எனக்குத் தங்கிக்கொள்ள அன்னை இடம் கொடுத்தார். மாலைத் தியானம் முடிந்து என் அறைக்குப் போனபிறகு, இரவு நேரம் மொட்டை மாடியில் அமர்ந்து, எங்கு வந்தோம்? எங்கு போவோம்? என்று அதே சிந்தனையில் ஈடுபடுவேன்.

(இப்படி ப்ரீத்தி சொல்லிக்கொண்டிருக்கும்போதே தான் இங்கு வருமுன் தன் வீட்டு மொட்டை மாடியிலமர்ந்து இதே சிந்தனையில் தானீடுபட்டதை உமா நினைவுகொண்டாள்).

அப்போது யுத்த வேளையாதலால் தெருவிளக்குகள் எரியா.

ஒரு நாள் காலை அன்னையிடம் ஆசீர்வாதப் பூக்கள் வாங்கப் போனபோது, அன்னை மிகுந்த வாத்சல்யத்துடன் என் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு, என்னை மிக அருகில் வைத்துக்கொண்டு, ஒரு நல்ல நண்பரைப்போல, ''நீ தினமும் மாலையில் ஏன் இவ்வாறு சிந்திக்கிறாய்?'' என்று கூறியது மட்டுமின்றி, என்னுள் எழும் கேள்விகள், எண்ணங்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக அடுக்கிக்கொண்டே போனார்கள். நம் கற்பனையைக் கடந்த அவர் அற்புத வடிவை அன்று கண்டேன். 'இம்மாதிரியான சிந்தனைகளில் ஈடுபடாதே. எங்களிடம் நம்பிக்கை வைத்துச் சந்தோஷமாயிரு. பொறுப்பு எங்களுடையது. நான் இருக்கிறேன். ஸ்ரீ அரவிந்தர் இருக்கிறார். உங்களுக்கென்ன கவலை' என்றார். ஆம், இவரே நம் உண்மையான தாய் என்றுணர்ந்தேன்" என்கிறாள் ப்ரீத்தி.

"என்ன உமா! ஸ்தம்பித்து நிற்கிறாய்" என்றாள் ப்ரீத்தி.

‘‘ஆமாம் ப்ரீத்தி! இதே வினாக்கள்தாம் என்னையும் எப்பொழுதும் குடைந்தெடுக்கும். எனக்கு யாரிடமும் ஆறுதல் மொழி கிடைக்கவில்லை. ப்ரீத்தி உண்மையிலேயே நான் தேடிய இலக்கைக் கண்டுபிடித்துவிட்டேன். அன்னையின் அந்தப் பதில் அவரே எனக்கும் உண்மையான அம்மா என்பதை உறுதிப்படுத்திவிட்டது'' என்றாள் உமா.

அவர்கள் பிரியவேண்டிய இடம் வந்ததால் இருவரும் பிரிந்தனர்.

அன்றிரவு உமா, “*நானிருக்கிறேன். ஸ்ரீ அரவிந்தர் இருக்கிறார். பொறுப்பை எங்களிடம் விட்டுவிட்டு சந்தோஷமாய் இரு*” என்று ப்ரீத்திமூலம் தனக்குச் சொல்லியிருப்பதாய் உணர்ந்து மீண்டும், மீண்டும் அப்பேச்சுக்களையே அசை போட்டாள்.

மறுநாள் வகுப்பு முடிந்து இருவரும் பேசிக்கொண்டே வந்தனர். “அது சரி, ப்ரீத்தி. நீ எப்படி இங்கு நிரந்தரமாய்த் தங்க முடிந்தது?” என்றாள் உமா.

“அதுவும் ஒரு சுவையான நிகழ்ச்சிதான். அப்போதெல்லாம் அன்னையைக் காண ஆசிரமத்திற்கு வருவதென்றால் அன்னைக்குத் தம் புகைப்படங்களை அனுப்பவேண்டும். ஆசிரமச் செயலாளர் உத்தரவின்பேரில் என்னுடையதும், என் தங்கையுடையதும் புகைப்படங்கள் அனுப்பப்பட்டன. அன்னை அனுமதிப்பாரோ என்று நாங்கள் தவித்தோம். எங்கள் தவிப்படங்க அன்னை அனுமதியும் வழங்கிவிட்டார். அப்பாவுடன் வந்தோம். அது 1941. அன்னையைப் பார்த்தோம். அவ்வாறு பார்த்தபோது, அப்பா! அவர் எவ்வளவு அழகு. அந்தக் கண்களில் வீசிய பொன்னொளி, அவர் தொட்டதால் ஏற்பட்ட பரவசம் யாவும் என்னைத் தன்வசமிழக்க வைத்துவிட்டது. அவரைப் பிரிந்துபோக என் மனம் சண்டி செய்தது. நளினி மாமாவிடம் கேட்டேன்.



அவரோ முதலில் உன் படிப்பு முடியட்டும். பிறகு வரலாம் என்று கூறிவிட்டார்.

ஃபேணிக்குத் திரும்பினோம். ஆனால் என் மனம் அங்கு ஒட்டவில்லை. என் மனம் எப்போதும் அன்னைக்காக ஏங்கத் தொடங்கிவிட்டது. என் ஏக்கம் புரியாத தோழிகள், ‘ஏன் என்னவோ போலிருக்கிறாய்?’ என்று துளைத்தனர்.

என் மனம் அன்னையையே நினைத்து ஏங்குகிறது. இங்கிருக்கப் பிடிக்கவில்லை என்றேன். அவர்களுக்கு வியப்பு. எனக்கோ என் மனநிலையை அவர்களுக்குக் கூறிப் புரியவைக்கத் தெரியவில்லை.

பி.ஏ. தேர்வு முடிந்தவுடன் பாண்டி செல்லவேண்டும் என்பதையே கருதிக்கொண்டிருந்தேன். நளினி மாமாவுக்கும் எழுதினேன். ‘முதலில் படிப்பை முடி’ – என்று அதையே எழுதினார். அன்னையின் அருளால் 1944 ஏப்ரல் தரிசனத்திற்கு அப்பாவுடன் வந்தேன்.

ஒரு நாள் அன்னையைத் தரிசிக்க வந்தபோது, ‘குட்மார்னிங்’ என்று அழகிய பிரெஞ்சில் இனிமையாய்க் கூறினார்கள். அந்தக் கனிவான சொல்லைக் கேட்ட என் உள்ளம் அவருடன் ஒட்டிக்கொண்டு பிரிய மறுத்தது. அன்னையைவிட்டு என்னால் வேறெங்கும் இருக்க முடியாது என்றெண்ணினேன். “தாயே! நான் இங்கேயே உம்முடனேயே இருக்க விரும்புகிறேன்” என்று திடீரெனக் கூறிவிட்டேன். ஆங்கிலத்தில் கூறியதால் சரியாகச் சொன்னேனா என்றுகூடத் தெரியாது. ஆனால் அன்னை என் பிரார்த்தனையைக் கேட்டவுடன் தன்னிரண்டு கரங்களையும் நீட்டி என்னைப் பிடித்துத் தன் பின்புறம் வைத்துக்கொண்டார்.

அடுத்து வரவேண்டியவரை, “கமின் (come in)” என்றார். வந்தவரோ என் தந்தை. நான் அவரிடம் எவ்வித அனுமதியும் பெறாமல் அன்னையிடம் இங்கே இருக்கப் பிரியப்படுகிறேன் என்று கூறியதை எண்ணி அஞ்சத் தொடங்கினேன்...'' என்று கூறிக்கொண்டிருந்தபோது,

“அட! அப்புறம் என்னாயிற்று?” என்றாள் உமா.

“அந்த ஆனந்தத்தை என்ன சொல்ல! அன்னையே என் தந்தையாரிடம், ''ப்ரீத்தியை இங்கு என்னுடனேயே வைத்துக்கொள்கிறேன்” என்று சொல்லிவிட்டார்.

(உமா கேட்டுக்கொண்டிருக்கும்போதே பரவசத்தால் கண்ணீர் விடுகிறாள். ‘காதலாகி, கண்ணீர் மல்கி’ என்று இதைத்தான் அடியவர்கள் குறித்திருப்பார்களோ)

அப்பாவிற்கோ, என்ன சொல்வதென்று புரியவில்லை.

“ப்ரீத்தியின் தாய் அவளைப் பிரிந்திருக்க வருந்துவாளே....” என்று அப்பா தயங்கியபடி கூறினார்.

“அடுத்த ஆண்டு நீங்கள் எல்லோரும் இங்கே நிரந்தரமாய்த் தங்கும்படி வந்துவிடுங்கள்” என்று சொல்லிவிட்டார் அன்னை”.

“ப்ரீத்தி! நீ ஜென்மஜென்மமாய் பராசக்தியை உபாசனை செய்திருக்கிறாய். அன்னையே உன்னைத் தம்மிடம் வைத்துக் கொள்வதென்றால்..... இது எல்லோருக்கும் கிடைப்பதன்று. உன்னைப் பார்க்கும்போது, உன் பேச்சைக் கேட்கும்போது, நான் அன்னையையே பார்க்கிறேன். என்றேனும் ஒரு நாள் நானும் அவருக்கே உடைமையாகமாட்டேனா என்று ஏங்குகிறேன்'' என்றாள்.



“கவலைப்படாதே உமா. உன் ஆர்வம் நிச்சயம் உன்னை அன்னையிடம் அழைத்துச் செல்லும்” என்றாள் ப்ரீத்தி.

❂❂❂

மாமி உமாவை கோவிலுக்குப் போக அழைத்தாள்.

''இல்லை மாமி. நான் ஒரு முக்கிய டெஸ்டிற்குப் படிக்கிறேன்” என்று மறுத்தாள்.

“சாமியை வேண்டிக்கொண்டு படித்தால் நன்றாகப் படிப்பு வரும்” என்றாள் மாமி.

‘என் படிப்பே ஸ்வாமிதானே. இதில் வேண்டிக்கொள்ள யாரிடம் போவது’ என்றெண்ணிய உமா அப்போதுதான் வீடு திரும்பிய மாமாவைப் பார்த்தவுடன், ''மாமி நீங்கள் போய் வாருங்கள். மாமாவுக்கு நான் டிபன் கொடுக்கிறேன்'' என்று காரணம்காட்டி மறுத்துவிட்டாள்.

மாமாவுக்குச் சிற்றுண்டி பரிமாறுகிறாள்.

மாமா சாப்பிட்டுக்கொண்டே பரிவுடன், ''உமா, உனக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை பார்க்கவேண்டும். அரசாங்க வேலையா? சொந்தத் தொழிலா? எப்படிப்பட்ட வேலையில் உள்ள புருஷன் வேண்டும்?” என்றார்.

“என்ன மாமா, என்னைப் போய்க் கேட்கிறீர்களே? எனக்கு என்ன வேண்டும் என்பது என்னைவிட அம்மாவுக்குத்தானே (ஸ்ரீ அன்னையை எண்ணிக்கொண்டே) நன்றாகத் தெரியும். அவரே பார்த்துக்கொள்வார்” என்றாள்.

“நீ சொல்வதும் சரிதான்” என்றார் மாமா.

மறுநாள் வகுப்பில் நுழைந்ததும் ப்ரீத்தி இவள் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். ஆசிரியர் வர இன்னும் சில நிமிடங்கள் ஆகும் என்ற நிலையில், மாணவிகள் தத்தம் தோழிகளுடன் தத்தமக்குப் பிடித்தவாறு உரையாடிக் கொண்டிருந்தனர்.

"என்ன ப்ரீத்தி! வழக்கத்தைவிட உற்சாகமாயிருக்கிறாய்?" என்றாள் உமா.

"சீக்கிரம் வா, உமா! உனக்கு அன்னையைத் தரக் காத்து இருக்கிறேன்" என்றாள் ப்ரீத்தியும் ஆர்வமாய்.

அவளை நெருங்கிவந்து, அவள் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள் உமா. அழகான மேலட்டை போடப்பட்ட சிறிய புத்தகம் ஒன்றை ப்ரீத்தி கொடுத்தாள்.

அதை ஆர்வத்துடன் பிரித்து முதல் பக்கத்தைப் புரட்டியவுடன் "*தி மதர்*" என்ற பெயரைப் பார்த்தவுடன் அப்படியே அதை மூடி நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள். கண்கள் ஆனந்தத்தில் தளும்பி நின்றன.

ப்ரீத்தி உமாவின் கைகளை மென்மையாகப் பிடித்து அன்புடன் அவளை உனக்குத் திருப்திதானே என்பதுபோல் ஒரு பார்வை பார்க்க, உமா நன்றியுடன் கண்களால் பதில் கூறினாள். திடீரென்று வகுப்பு அமைதி ஆயிற்று. ஆசிரியரின் வருகையே அமைதிக்குக் காரணம்.

மாணவிகள் வகுப்பைக் கவனித்தனர். உமாவின் கவனம் வகுப்பில் இல்லை. புத்தகத்தைப் படிப்பதிலேயே அவள் எண்ணமிருந்ததால், எப்போது வகுப்பு முடியும் என்று எண்ணத் தொடங்கிவிட்டாள்.



வழக்கம்போல் ஆசிரியர் உமாவிடம் கேள்வி கேட்க, எப்போதும் அழகாகத் தெளிவாக பதில் கூறி ஆசிரியரை மகிழ்விக்கும் உமா இப்போது புத்தகம் படிக்கவேண்டும் என்ற நினைவிலேயே இலயித்திருந்ததால், "இன்றே படித்துவிடுவேன்" என்றாள் எழுந்து உற்சாகமாக.

வகுப்பே 'கொல்'லென்று சிரித்ததும் உமா தன்னிலை உணர்ந்து வெட்கப்பட்டாள்.

''நேற்றே படித்திருப்பாய் என்றல்லவோ கேட்டேன். இன்றுதான் படிக்கப்போகிறாயா?'' என்று ஆசிரியர் அவளை விளையாட்டாய்க் கேலி செய்ய, சட்டென்று ப்ரீத்தி எழுந்து சமாளித்தாள். ஒருவாறு வகுப்பு முடிந்து மாணவிகள் வெளியே வந்தனர்.

"என்னாயிற்று உமா?" என்றாள் ப்ரீத்தி.

"இல்லை ப்ரீத்தி. இனி எனக்கு எதிலும் நாட்டமிராது. என் நினைவு முழுவதும் நீ கொடுத்த புத்தகத்தில்தான் இருக்கிறது" என்றாள் உமா.

''வீட்டிற்குப் போய், அமைதியாய்ப் படி'' என்று விடை கொடுத்தாள் ப்ரீத்தி.

அன்றிரவு எல்லா வேலைகளும் முடிந்து மாமாவும், மாமியும் உறங்கியபிறகு, உமா தன் அறையில் சென்று தனியாக புத்தகத்தை எடுத்தாள். வீட்டினர் கண்ணில்பட்டால் தன் தவம் கலைக்கப்பட்டுவிடும் என்று யாரும் அறியாமல் எடுத்தாள்.

*தொடரும்.....*

❀❀❀

## No delight condemns the delight of another.

- *Bliss* ஆனந்தம் *Delight* என்பது ஆனந்தம் வாழ்வில் வெளிப்படுவது.
- சிருஷ்டி ஏற்பட்டதே உலகில் சச்சிதானந்தம் பெரிய ஆனந்தமாக வெளிப்படுவதற்காக.
- அயர்ந்து தூங்குபவரை நாம் எழுப்பமாட்டோம். அவர் ஓய்வை அனுபவிப்பதை இடையூறு செய்தல் சரியில்லை என நினைக்கிறோம்.
- இளைஞர் பலர் ஆரவாரமாக, சந்தோஷப்படும்பொழுது அதைத் தடுப்பது போன்ற காரியத்தைச் செய்ய வேண்டுமானால், ‘‘எப்படி அவர்கள் சந்தோஷத்தைக் கெடுப்பது?” என நினைக்கிறோம்.
- ஒருவர் ஆனந்தப்படுவதைத் தடுக்கவோ, அல்லது ஒருவருக்கு வருத்தம் தரும் காரியத்தைச் செய்யவோ நாம் தயங்குகிறோம்.
- இதன் அடிப்படை உபநிஷதம் கூறுவது,

“எந்த ஆத்மாவும் எல்லா ஆத்மாக்களினுள் உறைகின்றது.
எல்லா ஆத்மாக்களும் ஓர் ஆத்மாவில் உறைகின்றன.”

இதுவே சத்தியஜீவியத்தின் அடிப்படை.

ஆனந்தம் என்பது உறவு.

ஆத்மா அடுத்த ஆத்மாவோடு உறவுகொண்டு ஆனந்தப்படுகிறது.

அப்படியானால் எப்படி ஒருவர் பிறர் ஆனந்தத்தைக் கண்டிக்க முடியும்?

- 20ஆம் நூற்றாண்டில் தூக்குத் தண்டனையை பெரும்பாலான நாடுகள் கைவிட்டன.
- குற்றவாளியைக் குற்றவாளி எனக் கருதாது, அவன் சந்தர்ப்பம் அவனைக் குற்றம் செய்யும்படி நிர்பந்தித்தது, தூண்டியது. அந்த சந்தர்ப்பத்தில் நாமும் அப்படியே செய்திருப்போம் என மக்கள் மனம் மாறுகிறது.
- அடுத்த கட்டத்தில் குற்றவாளி குற்றம் செய்வதில் இன்பம் கண்டால், நாம் அதை ஏற்கவேண்டும் என்று கருதவேண்டும்.
- அது குற்றத்தைச் சரி என்பதுபோல் தோன்றும்.
- குற்றம் வேறு, அதில் காணும் இன்பம் வேறு. அவன் பெறும் இன்பம் அவனுக்கு முக்கியம். அதை நாம் ஏற்கவேண்டும் என்பது ஸ்ரீ அரவிந்தம். இதைத் தவறாகக் குற்றத்தைச் சரி என்பதாகக் கொள்ளக்கூடாது. படிக்காமல் விளையாடும் பையன் விளையாட்டில் காணும் இன்பத்தை நாம் ஏற்கலாம். அது படிக்காதது சரி என்பதாகாது. படிப்பு முறை இத்தத்துவப்படி விளையாட்டாக அமைந்துள்ளது. காலையில் எழுந்தவுடன் சிறு குழந்தைகள் பள்ளிக்கூடம் போகவேண்டும் என்று கேட்கின்றன.
- விளையாடும் குழந்தையின் இன்பத்தை நாம் ஏற்றால், பிறகு குற்றம் செய்பவனின் ஆனந்தத்தையும் ஏற்கலாம். ஏற்கும் காலத்து குற்றம் முதலில் பிரிந்தும், முடிவில் திருவுருமாறியும் தெரியும்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

எண்ணத்தை உணர்வு பலவந்தப்படுத்தினால் படபடப்பு வருகிறது.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

கட்டுப்பாடு வெளியிலிருந்து வருகிறது.

மனம் உணர்வைக் கட்டுப்படுத்துவது சுயக்கட்டுப்பாடு.

உணர்வே தான் கட்டுப்பட முன்வருவது உயர்ந்த கட்டுப்பாடு.

Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Postal Regn. No.TN/PMG(CCR)/114/03-05 Licensed to post without prepayment No.45/03-05

## அறிவிப்பு

**இவ்வட்டத்திற்குள் ◎ இக்குறி ✓ இருந்தால் உங்கள் சந்தா முடிவடைந்துவிட்டது. உடனடியாக புதுப்பிக்கவும்.**

## சொசைட்டியின் வெளியீடுகள்

ஆங்கில நூல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | Mental Peace of the Industrialist | ரூ. 30 |
| 2. | Sri Aravindam | ரூ. 40 |
| 3. | Luck | ரூ. 50 |
| 4. | A Discussion on The Life Divine | ரூ.100 |
| 5. | Life & Teachings of Sri Aurobindo and The Mother | ரூ.120 |
| 6. | Spirituality and Prosperity - I | ரூ.150 |
| 7. | Spirituality and Prosperity - II | ரூ.200 |

மற்ற வெளியீடுகள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிலின் ஜீவன் | N. கண்ணன் | ரூ. 30 |
| 2. | தேடிவரும் யோகம் | பிரித்திவ் | ரூ. 50 |
| 3. | திருவருளே தீராத செல்வம் | N. அசோகன் | ரூ. 75 |
| 4. | திருவடி தரிசனம் | N. அசோகன் | ரூ. 75 |
| 5. | அருளோவியம் | N. அசோகன் | ரூ. 80 |
| 6. | பக்தியும் சேவையும் | N. அசோகன் | ரூ.100 |
| 7. | சத் பிரம்மம் | விசாலம் | ரூ. 20 |
| 8. | சத் புருஷன் | விஜயா & விசாலம்* | ரூ. 20 |

*சென்னையில் மட்டுமே கிடைக்கும்.

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# அமிர்தத்தை அறியாத அறிவு

பதவியிலுள்ளவன் செய்யும் தவறு அவனைப் பாதிப்பதில்லை. அதனால் அது தவறு என அவன் அறிவதில்லை. அவன் அறிந்தாலும், அறியாவிட்டாலும் தவறு தவறேயாகும். கெட்டிக்காரப் பையன் படிக்காவிட்டாலும் பாஸ் செய்கிறான். பாஸ் செய்யப் படிக்கவேண்டும் என்பது அவசியமில்லை என்று அவன் பேசுவதை அனைவரும் எடுத்துக்கொள்ள முடியாது. அவன் பெற்றது பாஸ்; இழந்தது முதல் வகுப்பு, முதல் மார்க்.

**அன்புக்காகக் கெஞ்சுபவன் நிலை**
**அவல நிலை என்று தாகூர் கூறினார்.**

**இழந்ததை அறியாதது அறியாமையின் சிகரம்**
**எனக் கூறத் தோன்றுகிறது.**

ஏதோ காரணத்தால் அன்னையின் ஆதரவில் வளர்ந்தவர் பலர், அருகில் இருந்தவர் சிலர், அவர் சூழலில் உள்ளவர் ஏராளம். அவர்கள் தாங்கள் பெற்றதை அறியாமல் அதை இழப்பதற்குரிய அத்தனையும் செய்வது அனைவரும் தவறாது செய்வது. உடன் பிறந்தவர் என்பதால் தொத்து வியாதி தொற்றி வாராதா? அன்னையை ஏற்றுக்கொண்டவர்கள் பழைய உறவு, நட்பு - அவர்கள் அன்னையை ஏற்காத உறவு, நட்பு - ஆகியவற்றைப் பாராட்டினால் மூச்சு திணறும். அவர்கள் ஸ்பர்சம்பட்டால் திணறும் மூச்சு நின்றுவிடும். இதை 10 வருஷங்களாக அறியாமல் இருக்கலாமா? மீண்டும், மீண்டும் சூழலைவிட்டு வெளியே போகமுயலலாமா? கருமாதி போன்ற சாங்கியங்களுடன் தொடர்புகொள்வது அன்னை ஜீவியத்திற்கு நேர் எதிரானது. சூழல் வலுவாக இருக்கும்வரை கருமாதி உடல் உபாதை தரும். சூழல் கரைந்துவிட்டால் ஆபத்து.

**அன்னையின் அரவணைப்பிலுள்ளவர் அதைவிட்டுப் போக விரும்பும் நினைவு அறிவுக்குப் பொருந்துமா? வாழ உதவுமா?**

❀❀❀

# தவம் - யோகம்

இந்தியர்கள் வேலை செய்யமாட்டார்கள். வேலை செய்யத் தெரியாது. தெரிந்தவர் செய்யமாட்டார்கள் எனப் பெயர் வாங்கியவர். நம் நாட்டில் உத்தமன், உயர்ந்தவர் எனக் கருதப்படுவது அரசனில்லை. அப்படிக் கருதப்படுபவர்கள் யோகி, ரிஷி, தவசி, முனி, சன்யாசி, ஆகிய ஆன்மீகப் பெருமக்கள். அவர்களுடைய சாதனை சமாதி, நிஷ்டை. மரத்தடியிலிருப்பவர் மரத்தடியிலேயே இருப்பார். ‘‘இருக்குமிடம் தேடி என் பசிக்கு அன்னம் உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன்’’ என்பது இலட்சியம்.

இரண்டாம் உலக யுத்தத்திற்குமுன் நம் நாட்டில் சான்றோர் எனப்படுபவர், படித்தவர், ஊரில் முக்கியஸ்தர்கள், நிதானமாக மெல்லியக் குரலில் பேசுவார்கள். நடந்துபோகும்பொழுது அமைதியாக நடப்பார்கள். அவர்களிடம் பேசுபவர் தூர நின்று அமைதியாகக் கை கட்டி, வாய் பொத்திப் பேசுவர். அவர்கள் பதில் மெதுவாக, நிதானமாக, ஓரிரு சொல்லாக வரும். ஆர்ப்பாட்டம், ஆரவாரம் அவரறியாதது. அதுவே இலட்சியம். அவர்கள் வீட்டைவிட்டு வெளியே அவசியமில்லாமல் போகமாட்டார்கள். திண்ணையிலும் வந்து உட்காரமாட்டார்கள்.

எனவே, இலட்சிய நடைமுறை என்பது,

- **அமைதி, மௌனம், நிதானம்.**
- **அசையாத இருக்கை அத்தியாவசியம்.**
- **சம்பாதிக்க முயலாமல், எண்ணாமல், எதையும் செய்யாமல் வாழ்வது ஆன்றறிந்து அடங்கிய சான்றோர் செயல் எனக் கருதப்பட்டது.**
- **அவ்வுயர்ந்த இலட்சியம் நாளடைவில் எதுவும் செய்யப் பிரியப்படாத சோம்பேறிக்கு உறுதுணையாயிற்று.**

❀❀❀